தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கரும்பு விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஆட்சியரிடம் மனு

புதுச்சேரி லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் தீபக்குமாரிடம் விவசாயிகள் வெள்ளிக்கிழமை கோரிக்கை மனு அளித்தனர்.

கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கடந்த 2012-13ஆம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு கரும்பு அனுப்பி 12 மாதங்கள் ஆகியும் அதற்கான தொகையை வழங்கவில்லை.

மேலும் முத்தரப்புக் கூட்டத்தை கூட்டி கரும்பு விலையை நிர்ணயிக்கவில்லை. பயிர் கடனுக்காக விவசாயிகளிடம் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.3 கோடி கடன் தொகையை காலத்தோடு ஆலை நிர்வாகம் வங்கிகளுக்கு செலுத்தத் தவறியதால் அதற்காக விவசாயிகள் கூடுதல் வட்டி, அபராத வட்டியை செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அருகே உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டி அனுப்ப தடையில்லா சான்றை மாநில அரசு வழங்க வேண்டும் என வலியுறுத்தி துணைநிலை ஆளுநர், முதல்வர், வேளாண் அமைச்சர், இயக்குநர், சர்க்கரை ஆலைத் தலைவருக்கு மனு அனுப்பியும் பயனில்லை. இதுதொடர்பாக கரும்பு விவசாயிகள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கும் நிலுவையில் உள்ளது.

புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நடப்பாண்டு அரவைப் பணியை இதுவரை தொடங்கவில்லை. நவம்பர் மாதம் வெட்டி அனுப்ப வேண்டிய 20 ஆயிரம் டன் கரும்பு,டிசம்பர் மாதம் வெட்டி அனுப்ப வேண்டிய 40 ஆயிரம் டன் கரும்பு அரவை தொடங்காதால் சாகுபடி காலம் முடிந்தும் அறுவடை செய்யாமல் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே இந்த 60 ஆயிரம் டன் கரும்பையாவது மாற்று சர்க்கரை ஆலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் முத்தரப்பு கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும். விவசாயிகளிடம் பிடித்தம் செய்த கடனை உடனே வங்கிகளுக்கு வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டும்.

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை கூட்ட வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

**காய்கறிகள் விலை சரிவு: வெங்காயம் கிலோ ரூ.18-க்கு விற்பனை**

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் பெரும்பாலான காய்கறிகளின் விலை சரிவடைந்துள்ளது. ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.18-க்கு விற்கப்பட்டது.

வரத்து அதிகரித்ததால் இந்த விலை சரிவு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு திண்டுக்கல், மதுரை, ஒட்டன்சத்திரம் மற்றும் ஆந்திரம், கேரளம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து லாரிகள் மூலம் தினமும் காய்கறிகள், விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும் பெரும்பாலான காய்கறிகளின் வரத்து சற்று அதிகரித்ததால் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.25 வரை விலை குறைந்து காணப்பட்டது.

கடந்த வாரம் ரூ.40-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.18-க்கும், ரூ.70-க்கு விற்பனையான ஒரு கிலோ முதல் தர சின்ன வெங்காயம் ரூ.35 -க்கும், ரூ.35 வரை விற்பனையான தக்காளி கிலோ ரூ.15-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதேபோல், கடந்த வாரம் வரை ரூ.170-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ பச்சைப் பட்டாணி தற்போது ரூ.35-க்கு விற்கப்படுகிறது.பெரும்பாலான காய்கறிகளின் விலை குறைந்திருந்தாலும் முருங்கைக்காய் விலை மட்டும் தொடர்ந்து அதே நிலையில் உள்ளது. முருங்கைக்காய் கிலோ ரூ.100-க்கும், ஒரு காய் ரூ.10-க்கும் விற்பனையாகிறது.

இதுகுறித்து கோயம்பேடு காய்கறி மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது: கடந்த வாரம் பெரிய வெங்காயம் 250 முதல் 300 டன் வரை மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொண்டுவரப்பட்டது. தற்போது மகாராஷ்டிரம், ஆந்திரம் உள்ளிட்ட பகுதிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் கடந்த சில நாள்களாக தினமும் 600 டன் வரை வெங்காயம் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன.

இதேபோல் தக்காளி வரத்து 350 டன்னில் இருந்து தற்போது 550 டன் ஆக உயர்ந்துள்ளது. கடந்த சில வாரங்களை விட பெரும்பாலான காய்கறிகளின் விலை குறைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் வழக்கத்தைக் காட்டிலும் அதிகளவு காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர் என்றார்.

**வெள்ளிக்கிழமை நிலவரப்படி காய்கறிகளின் விலை விவரம், (பழைய விலை அடைப்புக்குறிக்குள்)**

கேரட் - ரூ.20 (ரூ.35)

பீட்ரூட் - ரூ.13 (ரூ.18)

உருளைக்கிழங்கு - ரூ.22 (ரூ.25)

கத்தரிக்காய் - ரூ.10 (ரூ.18)

சேனைக்கிழங்கு - ரூ.10 (ரூ.15)

புடலங்காய் - ரூ.12 (ரூ.16)

பச்சை மிளகாய் - ரூ.15 (ரூ.20)

முதல் தர பெரிய வெங்காயம் - ரூ.22 (ரூ.35)

2-ஆம் தர பெரிய வெங்காயம் - ரூ.18 (ரூ.30 )

முதல் தர சின்ன வெங்காயம் - ரூ.35 (ரூ.60)

தக்காளி - ரூ.15 (ரூ.35)

காலிஃபிளவர் - ரூ.10 (ரூ.22)

பச்சைப்பட்டாணி - ரூ.35 (ரூ.170)

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்: ஆட்சியர் வழங்கினார்**

வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் 11 பேருக்கு மானிய விலையில் 23.13 லட்சம் மதிப்பில் வெள்ளிக்கிழமை வேளாண் கருவிகளை ஆட்சியர் க.நந்தகுமார் வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கும் விழா ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற் பொறியாளர் எம்.யுவராஜ் முன்னிலை வகித்தார். விழாவில் 11 விவசாயிகளுக்கு மானிய விலையில், ரூ.23லட்சத்து 13 ஆயிரம் மதிப்பிலான பவர்டில்லர்கள், மினி டிராக்டர்கள், மரம் அறுக்கும் கருவிகள் உள்ளிட்டவற்றை ஆட்சியர் வழங்கினார்.

விழாவில் உதவி செயற்பொறியாளர்கள் சிதம்பரேசன், கே.நடராஜன் மற்றும் விவசாயிகள் பலரும் உடன் இருந்தனர்.

**முல்லைப்பெரியாறு தண்ணீர் திறப்பை குறைக்கக் கோரி மனு**

கம்பம் பள்ளத்தாக்கு சம்பா சாகுபடி பாசனத்திற்கு முல்லைப் பெரியாற்றின் தண்ணீரின் அளவைக்குறைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் பழனிசாமியிடம் விவசாயிகள் சங்கத்தினர் மனு அளித்தனர்.

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் கோடைகால நெற்பயிர் அறுவடை முடிந்துள்ளது. 2-ஆம் போக சம்பா நாற்று நடவுப்பணி சுமார் 14,700 ஏக்கரில் நடைபெற்று வருகிறது. இன்னும் சுமார் 70 நாட்கள் வரை தண்ணீர் தேவைப்படும். தற்போது அணையில் 117 அடியே தண்ணீர் உள்ளது.

இந்நிலையில் முல்லைப் பெரியாறு நீர்மட்டம், பயிருக்கும் தேவைப்படும் தண்ணீரின் அளவு குறித்த ஆலோசனைக்கூட்டம் உத்தமபாளையம் பொதுப்பணித்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

செயற்பொறியாளர் அன்புச்செழியன், உதவிப்பொறியாளர் சந்தனக்குமார், கம்பம் பள்ளத்தாக்கு விவசாய சங்கத் தலைவர் தர்வேஸ் முகைதீன், கம்பம் விவசாய சங்கத் தலைவர் நாராயணன், விவசாய சங்கப் பிரதிநிதி ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தற்போது விநாடிக்கு 500 கனஅடி தண்ணீர் வந்துகொண்டு இருக்கிறது. இந்த அளவு தற்போது தேவையில்லை. இதே நிலை நீடித்தால் 2-ஆம் போகம் முழுமையடையும் போது தண்ணீர் பற்றாக்குறை ஏற்படலாம். எனவே விநாடிக்கு 300 கனஅடி தண்ணீர் திறந்து விட்டால் போதும் என்று கம்பம் பள்ளத்தாக்கு விவசாய சங்கத்தினர் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

பின்னர் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக உத்தமபாளையம் வந்த மாவட்ட ஆட்சியரிடம் இது குறித்து கோரிக்கை மனு அளித்தனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியர் கூறினார்.

## விவசாயத்துக்கு அதிக குதிரை சக்தி மோட்டாரை பயன்படுத்த அனுமதிக்க விவசாயிகள் கோரிக்கை

அதிக ஆழத்திலிருந்து நீரை எடுக்க வேண்டியுள்ளதால் விவசாய பம்ப் செட்டுகளில் அதிக குதிரை திறன் உள்ள மோட்டார்களைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகள் பேசியதாவது: மாவட்டத்தில் பம்ப்செட் மூலம் பரவலாக விவசாயம் நடைபெற்று வருகிறது.

கிணறுகள், ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் தற்போது அதிகளவு ஆழத்திற்கு

கிணறுகளை சீரமைத்து விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. ஏற்கெனவே அனுமதி பெற்ற மின் மோட்டார்களின் குதிரை சக்தி குறைவாக உள்ளதால் ஆழத்திலிருந்து தண்ணீர் எடுக்க முடிவதில்லை. அதிக திறன் கொண்ட மோட்டார்களைப் பயன்படுத்தும் சூழல் உருவாகி உள்ளது. இவ்வகை மோட்டார்களை விவசாயிகள் பயன்படுத்தும் போது மின் வாரியம் விவசாயிகள் மீது வழக்கும், அபராதமும் விதிக்கின்றனர். எனவே அதிக குதிரை சக்தி மோட்டார்களை விவசாயத்திற்காக பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

நெல் பயிருக்கு மட்டுமே காப்பீடு செய்யப்படுகிறது. ஆனால் நெல் பயிரை மட்டும் நடவு செய்யாமல் மாற்றுப் பயிர்களையும் விளைவிக்க ஆட்சியர் வலியுறுத்துகிறார். பயிர் காப்பீடு இல்லாமல் பிற பயிர்களை விவசாயிகள் எவ்வாறு மேற்கொள்ள முடியும். அனைத்து வகைப் பயிர்களுக்கும் காப்பீடு வழங்கினால் தான் மாற்றுப் பயிர்களை விளைவிக்க முடியும். நாட்டரசன்கோட்டைப் பகுதியில் விளை நிலங்களில் குரங்குகள் சேதம் விளைவிக்கிறது குரங்குகளைப் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்து மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் பேசியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களுக்கு பயிர் காப்பீடு வழங்கப்படுகிறது. திருப்புவனத்தில் வாழைக்கு பயிர் காப்பீடு உள்ளது.

ஆனால் சிவகங்கையில் வாழைக்கு பயிர் காப்பீடு இல்லை. மாநிலத்தில் 12 மாவட்டங்களில் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப பயிர் காப்பீடு வழங்கும் நிலை இருந்து வருகிறது. எல்லா பயிர்களுக்கும் காப்பீடு வழங்க வேண்டும் என அரசுக்கு மாவட்ட நிர்வாகம் கோரிக்கை வைத்துள்ளது. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகத் தான் அரசு மானியம் வழங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்: ஆட்சியர் வழங்கினார்**

வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் 11 பேருக்கு மானிய விலையில் 23.13 லட்சம் மதிப்பில் வெள்ளிக்கிழமை வேளாண் கருவிகளை ஆட்சியர் க.நந்தகுமார் வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கும் விழா ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற் பொறியாளர் எம்.யுவராஜ் முன்னிலை வகித்தார். விழாவில் 11 விவசாயிகளுக்கு மானிய விலையில், ரூ.23லட்சத்து 13 ஆயிரம் மதிப்பிலான பவர்டில்லர்கள், மினி டிராக்டர்கள், மரம் அறுக்கும் கருவிகள் உள்ளிட்டவற்றை ஆட்சியர் வழங்கினார்.

விழாவில் உதவி செயற்பொறியாளர்கள் சிதம்பரேசன், கே.நடராஜன் மற்றும் விவசாயிகள் பலரும் உடன் இருந்தனர்.

**24 இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 24-ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கான டிசம்பர் மாத விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 24-ம் தேதி, ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற உள்ளது. எனவே, திருப்பூர் மாவட்ட விவசாயிகள், விவசாயம் சார்ந்த பிரச்னைகள் குறித்த கோரிக்கை மனுக்களைக் கொடுத்து, உரிய தீர்வு காணலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை

விவசாயிகளின் கோரிக்கைள் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என, மரவள்ளி முத்தரப்புக் கூட்டத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்ட மரவள்ளி முத்தரப்புக் கூட்டம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளின் கூட்டம், உழுவோர் முதல் உண்போர் வரையிலான கலந்தாய்வுக் கூட்டம், அணைக்கட்டு பாசனதாரர்கள் சங்க விவசாயிகள் கூட்டம் ஆகியவை ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மரவள்ளி அறுவடைக்குப் பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், விற்பனை சார்ந்த பிரச்னைகள், இயற்கை சீற்றப் பாதிப்பு, புதிய ரகங்கள், இயந்திரம் மூலம் அறுவடை ஏற்பாடு, அரைவை செய்யும் ஆலையாளர்களின் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

தொடர்ந்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டத்தில் பால் கொள்முதல் விலை, கலப்புத் தீவனம், மானிய விலையில் தவிடு வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கத்தொகை குறித்தும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கியாளர்கள் கூட்டத்தில் பயிர்க் கடன், விவசாயிகள் சந்திக்கும் பிரச்னைகள், டிராக்டர் ஜப்தி விவரம், வறட்சி நிவாரணம் ஆகியவை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதையடுத்து, உழுவோர் முதல் உண்போர் வரையிலான கலந்தாய்வுக் கூட்டத்தில்,  அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்கள், உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை, உரிய நேரத்தில் நுகர்வோருக்கு உற்பத்திப் பொருள்களை அனுப்புதல், மொத்த விற்பனை மையங்களில் ஏற்படும் இன்னல்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டன.

அணைக்கட்டு பாசனதாரர்கள் சங்க விவசாயிகள் கூட்டத்தில், அணைக்கட்டு நீர் நிலவரம், கால்வாய் நீர்வரத்து, பாசனதாரர்கள் பிரச்னைகள் குறித்து விவசாயிகள் தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர்.

இதற்குப் பதிலளித்து பேசிய ஆட்சியர் கே.விவேகானந்தன், விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர்.ஆர்.சுசிலா, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) செல்வம், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் வி.ஜெகநாதன், நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் பார்த்தசாரதி, ஆவின் பொது மேலாளர் கே.கொம்பையன், கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் மு.ரத்தினவேலு உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**டெல்டா விவசாயிகளுக்கு விவசாயம் தொழில் அல்ல; வாழ்வியல்**

காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயம் என்பது தொழில் அல்ல; வாழ்வியல் என்றார் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார்.

டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தி, தமிழர் உரிமை மீட்பு இயக்கம் சார்பில் மயிலாடுதுறையில் புதன்கிழமை கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தமிழர் உரிமை மீட்பு இயக்கத்தின் மாநில அமைப்பாளர் இரா. முரளிதரன் தலைமை வகித்தார்.

இதில் பங்கேற்ற இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியது:

டெல்டா மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்தால் 12 மாவட்டங்கள் முழுமையாக பாதிக்கப்படும். எனவே, இந்தத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

மீத்தேன் வாயு எடுப்பது தொடர்பாக தமிழக விவசாயிகளின் கருத்துகளை மத்திய அரசு கேட்கவில்லை. இத்திட்டம் குறித்து விளக்கமும் அளிக்கவில்லை. இத்திட்டத்தின்படி 35 ஆண்டுகளுக்கு மீத்தேன் வாயுவையும், 100 ஆண்டுகளுக்கு நிலக்கரியையும் எடுக்கவும் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால குடிநீர் ஆதாரங்கள் பாதிக்கப்படும் என்பதோடு விவசாயம் முற்றிலும் அழிக்கப்படும் என்றார் அவர்.

பாஜக  விவசாயப் பிரிவு  மாநிலத் துணைத் தலைவர் கோவி.சேதுராமன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சி நாகை மாவட்டச் செயலர் ஜெ. குமாரவேல் உள்ளிட்டோர் கருத்தரங்கில் பேசினர்.

**கால்நடை மருத்துவமனைகளில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்**

கால்நடை வளர்ப்பவர்கள் கால்நடை மருத்துவமனையில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூர் நகரிலுள்ள கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி திட்ட துணை இயக்குநர் அலுவலகத்தை வெள்ளிக்கிழமை திறந்துவைத்து அவர் பேசியது:

அறுவை சிகிச்சை, நுண்கதிர் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கால்நடை வளர்ப்பவர்களுக்கு பெரும் பங்காற்றி வருகிறது இக்கால்நடை மருத்துவமனை. 2013 -ம் ஆண்டில் 1,800 கால்நடைகளுக்கு கருவூட்டல், 113 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், 7,584 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 13,472 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் தடுப்பூசி, 2,024 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, 2,200 ஆடுகளுக்கு ஆட்டம்மை தடுப்பூசி, 753 நாய்களுக்கு வெறிநாய் தடுப்பூடி உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. தற்போது திறக்கப்பட்டுள்ள அலுவலகம் மூலம் உறைவிந்து கிடங்கை அமைத்து மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் உறைவிந்து தங்கு தடையின்றி

வழங்கப்படும். ஜெர்ஸி இன உறைவிந்து மூலமாக, ஜெர்ஸி சிந்து இன விந்து மூலம் அதிக எண்ணிக்கையில் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படும். மேலும், தீவனபுல் சாகுபடியை ஊக்குவித்து, தீவன அபிவிருத்தியை அதிகரிக்கும் வாய்ப்பும் நமது மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது. இதனால் பால் உற்பத்தி பெருக வாய்ப்பு உள்ளது என்றார் நடராசன்.

கால்நடை பராமாரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் முகமது கனி, துணை இயக்குநர் (கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி) தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**காரைக்காலில் வேளாண் கருத்தரங்கம்**

: காரைக்கால் வேளாண் கல்லூரியில் நீடித்த நிலைத்த வேளாண்மை குறித்த கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

காரைக்கால் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் மாவட்டத்தில் விளைவிக்க தகுதியான பயிர், தோட்டப் பயிர்கள் குறித்து வேளாண் வல்லுநர்கள் பேசினர். கருத்தரங்கை கல்லூரி முதல்வர் வி. செல்லமுத்து தொடங்கிவைத்தார். கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் பேசுகையில், காரைக்கால் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் வழங்கப்படும் ஆலோசனை மற்றும் சலுகைகள், பயிர் செழிப்புக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

நீடித்த நிலைத்த வேளாண்மையில் பருவநிலை மாற்றத்தின் தாக்கமும், விளைவும் குறித்து ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய தொழில்நுட்ப வல்லுநர் ரமேஷ், சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பங்கு குறித்து சீர்காழி இந்திய பாரம்பரிய அறிவியல் மையத்தை சேர்ந்த சுபாஷினி ஆகியோர் பேசினார்.

காவிரி கழிமுக பகுதிக்கேற்ற நீடித்த வேளாண்மை தொழில்நுட்பம் குறித்து சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த எஸ். செல்லப்பாவும், நீடித்த வேளாண்மையில் வாய்ப்புகளும், சவால்களும் குறித்து வேளாண் கல்லூரி உழவியல் துறை இணைப் பேராசிரியர் ஆர். மோகனும் பேசினார்.

**விவசாயப் பணிகளுக்கு எம்பி, எம்எல்ஏ தொகுதி நிதி**

மக்களவை, சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை தடுப்பணைகள் கட்டவும், விவசாயம் சார்ந்த பணிகளுக்கு பயன்படுத்தவும் ஒதுக்கீடு செய்யவேண்டும் என திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

எம்எல்ஏ, எம்பி-க்கள் தங்களது நிதியை பேருந்து நிறுத்த நிழற்குடை அமைப்பது, கழிப்பறை, வகுப்பறை கட்டடம் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளுக்கே ஒதுக்கி வருகின்றனர். காமராஜர் ஆட்சி காலத்தில்தான் அணைகள் கட்டப்பட்டன. அதன் பிறகு நீராதாரத்தைப் பெருக்கவும், பாதுகாக்கவும் எந்தவித கட்டுமானப் பணிகளும் நடைபெறவில்லை. எனவே, எம்எல்ஏ, எம்பி தொகுதி மேம்பாட்டு நிதியை அணைகள் கட்டவும், குளம், குட்டை அமைக்கவும், ஏரிகள் தூர்வாரவும், கால்வாய் தூர்வாரவும் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளுக்கு பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் பிற மாவட்டங்களுக்கு முன் உதாரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எம்எல்ஏ, எம்பி தொகுதிகளில் முதலில் பணிகளைத் தொடங்கவேண்டும்.

மணல் கொள்ளை: மாவட்டம் முழுவதும் நீர்ப்படுகைகளில் மணல் கொள்ளை தொடர்கதையாகி வருகிறது. கனிமவளத் துறையினர் கண்டுகொள்வதே இல்லை. கடன் பெற்ற விவசாயிகளிடம் வங்கிகளில் அடாவடியாக நடந்து கொள்கின்றனர். தவணை செலுத்தாத விவசாயிகளின் டிராக்டர்களை இரவு நேரத்தில் வந்து பறிமுதல் செய்கின்றனர். மாவட்டத்தில் 7 லட்சத்துக்கும் அதிகமான வாழைகள் நாசமாகியும் நிவாரணம் வழங்கப்படவில்லை.

கொள்முதல் மையம்: வரும் தை, மாசி மாதங்களில் அறுவடை தீவிரமடையும் என்பதால் 4 கிராமங்களுக்கு ஒரு நெல்கொள்முதல் மையம் அமைக்க வேண்டும். இல்லையெனில் 4 ஆயிரம் ஹெக்டேர் பரப்புக்கு ஒரு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும். மன்னர் காலத்து குளங்கள்: மன்னர் காலத்தில் வெட்டப்பட்ட குளங்கள் பலவும் மாவட்டத்தில் அழிந்து வருகின்றன. எனவே, அனைத்து குளங்களையும் புனரமைத்து நீர்ப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள 11 அணைகள், கால்வாய்களை தூர்வார வேண்டும். இதற்காக ஆண்டுக்கு ரூ.200 கோடி என்ற வகையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் ஆயிரம் கோடியை முன்பே ஒதுக்கீடு செய்யவேண்டும்.

ஓய்வூதியம்: 60 வயது நிரம்பிய அனைத்து விவசாயிகளுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். சரவணபொய்கை நீர்ப்பிடிப்புப் பகுதியில் ஆக்கிரமித்து சாலை அமைப்பது, கடைகள் அமைப்பது உள்ளிட்ட பேரூராட்சியின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும். மானூர் குளத்துக்கு நீர்வரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும் என்றனர் விவசாயிகள்.

இதற்கு பதில் அளித்துப் பேசிய ஆட்சியர் மு.கருணாகரன், விவசாயிகள் கோரிக்கைகள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் கோரிக்கைகள் உடனடியாக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பி. உமாமகேஸ்வரி, மாவட்ட வன அலுவலர் சி. பத்மா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சௌந்தரராஜன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாலசுப்பிரமணியன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில், 6 விவசாயிகளுக்கு ரூ.4.72 லட்சம் மானியத்தில் ரூ.12.30 லட்சம் மதிப்பில் களைஎடுக்கும் கருவிகள், விசை உழுவைகள் வழங்கப்பட்டன.

## தென்னை விவசாயிகளுக்குப் பயிற்சி

உடன்குடி வட்டார விவசாயிகளுக்கான பண்ணைப் பள்ளி முகாம் வேப்பங்காடு கிராமத்தில் நடைபெற்றது.

முகாமுக்கு, உடன்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் உத்தண்டராமன் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி முன்னிலை வகித்தார்.

வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) ரா. குருமூர்த்தி, பஞ்சகவ்யா பயன்படுத்தி இயற்கை முறையில் அதிக விளைச்சல் பெறுவது குறித்து பேசினார். வேளாண்மை துணை இயக்குநர் (ஓய்வு) சூசை அந்தோனி, தென்னையில் இருந்து பெறப்படும் பொருள்கள், அதன் பயன்பாடுகள் குறித்தும், தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் உத்தண்டராமனும் பேசினர்.

மேலும் விவசாயிகளின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் கலந்துரையாடல் நிகழ்ச்சி  நடைபெற்றது. இதில், 25 விவசாயிகள் பங்கேற்றனர்.

பண்ணைப் பள்ளி விவசாயி ஆனந்தராஜ், தென்னை மரம் ஏறும் கருவி கொண்டு செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

தென்னையைத் தாக்கும் சிவப்பு கூன் வண்டு, காண்டாமிருக வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப் பொறி வழங்கப்பட்டது. பயிற்சியில் வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## 5 கால்நடை மருந்தகங்களில் உலர்தீவனக் கிடங்குகள்

கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 5 கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிடங்குகள் விரைவில் அமைக்கப்படும் என்று விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் விழுப்புரத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் பேசிய விவசாயிகள், மழைநீரை சேமிக்கும் வகையில் மாவட்டத்தில்

உள்ள வரத்து வாய்க்கால்கள் அனைத்தையும் தூர் வார வேண்டும். ஏரிகளை ஆழப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் வேண்டும், கூட்டுறவுத் துறை மூலம் பயிர்க் கடன் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் அதிக நிலுவை உள்ளதால் சிறப்பு கவனம் செலுத்தி மின் இணைப்புகள் வழங்கவும், மும் முனை மின்சாரம் விவசாயத்துக்கு கூடுதல் நேரத்திலும், தொடர்ந்து வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும், விரைவில் பட்டா மாற்றம் செய்து கொடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் பேசும்போது, சாத்தனூர் அணையில் இருந்து நீர் திறப்பு குறித்தான கூட்டம் வரும் டிசம்பர் 23ஆம் தேதி மாலை 3 மணி அளவில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் விழுப்புரம் மாவட்ட விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டும் என்றார்.

மேலும் இக்குறைதீர் கூட்டத்தில், கால்நடைகளுக்கு உலர் தீவனங்கள் (வைக்கோல், மக்காச்சோளம் மற்றும் சோளத்தட்டை) வழங்குவதற்காக காணை, வல்லம், வடசிறுவளூர், கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர்பேட்டை கால்நடை மருந்தகங்களில் உலர்தீவன கிடங்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உலர் தீவன கிடங்குகள் கட்டுவதற்காக ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக் கிடங்குகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். இத் திட்டத்தின் நோக்கம் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கால்நடைகளுக்கு உலர் தீவனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு கால்நடைக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் ஒரு வாரத்துக்கு தேவையான 21 கிலோ தீவனம் மானிய விலையில் வழங்குவதுதான்.

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குவதற்காக ரூ.335 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் எஸ்.சி மற்றும் எஸ்.டி விவசாயிகளுக்கு 63 கோடி உள்ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை சுமார் ரூ.27 கோடி அளவுக்கு

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையை விரைந்து வழங்க, தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகலாம் உள்ளிட்ட கருத்துக்களை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.முத்துமீனாள், வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.சக்கரவர்த்தி, விழுப்புரம் செயற்பொறியாளர் ஜி.ராஜி, கள்ளக்குறிச்சி செயற்பொறியாளர் அருட்பெருஞ்சோதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கிருஷ்ணமூர்த்தி, விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் வெ.பெரியசாமி, முன்னோடி வங்கி மேலாளர் ஏ.ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கரும்பு விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஆட்சியரிடம் மனு**

புதுச்சேரி லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு காண வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் தீபக்குமாரிடம் விவசாயிகள் வெள்ளிக்கிழமை கோரிக்கை மனு அளித்தனர்.

கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கடந்த 2012-13ஆம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு கரும்பு அனுப்பி 12 மாதங்கள் ஆகியும் அதற்கான தொகையை வழங்கவில்லை.

மேலும் முத்தரப்புக் கூட்டத்தை கூட்டி கரும்பு விலையை நிர்ணயிக்கவில்லை. பயிர் கடனுக்காக விவசாயிகளிடம் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.3 கோடி கடன் தொகையை காலத்தோடு ஆலை நிர்வாகம் வங்கிகளுக்கு செலுத்தத் தவறியதால் அதற்காக விவசாயிகள் கூடுதல் வட்டி, அபராத வட்டியை செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அருகே உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டி அனுப்ப தடையில்லா சான்றை மாநில அரசு வழங்க வேண்டும் என வலியுறுத்தி துணைநிலை ஆளுநர், முதல்வர், வேளாண் அமைச்சர், இயக்குநர், சர்க்கரை ஆலைத் தலைவருக்கு மனு

அனுப்பியும் பயனில்லை. இதுதொடர்பாக கரும்பு விவசாயிகள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கும் நிலுவையில் உள்ளது.

புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நடப்பாண்டு அரவைப் பணியை இதுவரை தொடங்கவில்லை. நவம்பர் மாதம் வெட்டி அனுப்ப வேண்டிய 20 ஆயிரம் டன் கரும்பு,டிசம்பர் மாதம் வெட்டி அனுப்ப வேண்டிய 40 ஆயிரம் டன் கரும்பு அரவை தொடங்காதால் சாகுபடி காலம் முடிந்தும் அறுவடை செய்யாமல் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே இந்த 60 ஆயிரம் டன் கரும்பையாவது மாற்று சர்க்கரை ஆலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் முத்தரப்பு கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும். விவசாயிகளிடம் பிடித்தம் செய்த கடனை உடனே வங்கிகளுக்கு வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டும்.

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை கூட்ட வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் விவசாயம் செய்ய அரசு அனுமதி



புதுடில்லி : கேரள மாநில அரசின் கடும் எதிர்ப்பை அடுத்து, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில், விவசாயம் மற்றும் தோட்டத் தொழில் செய்வதற்கு, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், அனுமதி வழங்கியுள்ளது.

தமிழகம், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் பரந்து விரிந்துள்ள, மேற்கு தொடர்ச்சி மலையின் வளத்தை பாதுகாப்பதற்கு, மத்திய அரசு, நடவடிக்கை எடுத்தது. இதற்காக, கஸ்துாரி ரங்கன் குழு அமைக்கப்பட்டது. அந்த குழு, சில பரிந்துரைகளை அளித்தது. இந்த பரிந்துரைகளை அரசு ஏற்று, உடனடியாக அமல்படுத்தியது.இதன்படி, இந்த மலைத்தொடரின், 37 சதவீதம் பகுதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்படும் என, அறிவிக்கப்பட்டது. இங்கு, சுரங்கத் தொழில் நடத்துவதற்கும், மணல் குவாரிகள் நடவத்துவதற்கும், அனல் மின் நிலையங்கள் அமைப்பதற்கும், 20 ஆயிரம் ச.மீ., மற்றும் அதற்கு மேல், கட்டுமான பணிகளை மேற்கொள்வதற்கும், தடை விதிக்கப்பட்டது.

இந்த பகுதிக்குள் மக்கள் வசிப்பதற்கும், விவசாயப் பணிகளை மேற்கொள்வதற்கும், தடை விதிக்கப்பட்டது. ஆனால், கேரளா உள்ளிட்ட

மாநிலங்களில், இதற்கு, கடும் எதிர்ப்பு எழுந்தது. அரசியல் கட்சிகள், போராட்டங்களை நடத்தின.இதையடுத்து, ஏற்கனவே அமல்படுத்தியிருந்த விதிமுறைகளை, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், தற்போது எளிமையாக்கியுள்ளது. இதன்படி, மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில், விவசாயம் மற்றும் தோட்டத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**வெற்றிலைக்கு விலை இல்லை: பறிக்காமல் விட்ட விவசாயிகள்**



தேவதானப்பட்டி: தேனி, பெரியகுளம் பகுதியில், வெற்றிலைக்கு, கட்டுப்படியான விலை இல்லாததால், கொடிக்காலில், பறிக்காமலே, விவசாயிகள் விட்டு வைத்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில்,தேனி,பெரியகுளம் பகுதியில்,10க்கும் மேற்பட்ட கிராமங்களில், 300 ஏக்கரில் வெற்றிலை சாகுபடி நடந்துள்ளது.இத்தொழிலில், 10 ஆயிரம் குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆண்டுதோறும், ஆக., செப்., மாதங்களில், அகத்தி விதை விதைப்புப் பணி நடக்கிறது. 60 நாட்கள் கழித்து, அக்., நவம்பரில், வெற்றிலைக் கொடி நடவு செய்யப்படும். ஆறு மாதங்கள் கழித்து, ஏப்., மே மாதங்களில் வெற்றிலை அறுவடை செய்யப்படும். ஒரு ஏக்கரில், வெற்றிலை சாகுபடி செய்ய,நான்கு லட்ச ரூபாய் செலவாகிறது. நோய் தாக்குதல் இல்லாமல் இருந்தால், தொடர்ந்து, மூன்று ஆண்டுகளுக்கு, இதன் பலனை அனுபவிக்கலாம். ஆனால், ஐந்து ஆண்டுகளாக,வெற்றிலையில், நோய் ஏற்படுகிறது. இப்பகுதியில், உற்பத்தியாகும் வெற்றிலை, கொடைக்கானல், திண்டுக்கல் உட்பட, பல ஊர்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. நான்கு மாதங்களுக்கு முன் வரை, கருப்பு வெற்றிலை, 60 ரூபாய், இளசு வெற்றிலை, 80 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

தற்போது, படிப்படியாக விலை குறைந்து, கருப்பு வெற்றிலை, 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தொடர்ந்து, விலை குறைந்து விற்றால், பராமரிப்பு செலவு கூட, கிடைக்காது என்பதால், இரண்டு மாதங்களாக, அறுவடைக்கு தயாராக உள்ள வெற்றிலையை பறிக்காமல்,விவசாயிகள், கொடியில் விட்டுள்ளனர்.

## "நீல நாக்கு' நோய் அபாயம்: சந்தைக்கு வந்த விலையில்லா ஆடுகள்

விருதுநகர்: விலையில்லா ஆடுகள், "நீல நாக்கு' நோய் தாக்குதலில் பாதிக்கப்பட்டு, சந்தைகளில் விற்பனைக்கு வருகின்றன. ஏழை எளியோருக்கு, தமிழக அரசு சார்பில், விலையில்லா ஆடுகள் , பசுக்கள் வழங்கப்படுகிறது. ஆடுகளுக்கு, நீல நாக்கு நோய் தாக்கியுள்ளதால், உணவு உண்ண முடியாமல், படுக்கையில் விழுந்து, 3 நாட்களில் இறந்து விடுகின்றன. இதை அடுத்து, அரசு வழங்கிய விலையில்லா ஆடுகளை, பயனாளிகள் விற்பனை செய்து வருகின்றனர். அதிகாரிகள் ஆய்வுக்கு வந்தால், ஆடுகள் மேய்ச்சலுக்கு சென்று விட்டதாக, கூறுகின்றனர். கால்நடை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "கால்நடைகளுக்கான சிறப்பு முகாமில், தடுப்பூசி போட்டு செல்கின்றனர். பலர் கால்நடைகளை, முகாமிற்கு கொண்டு வருவதில்லை. நோய் தாக்கிய தகவல் தெரிந்தால், உடனடி சிகிச்சை அளிக்கப்படும்.

## தமிழகத்தில் 175 இடங்களில் உலர் தீவன மையம்கால்நடைகளின் வறட்சியை தீர்க்க அரசு புதிய அதிரடி

தூத்துக்குடி: தமிழகம் முழுவதும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவதற்காக 175 இடங்களில் உலர் தீவன மையம் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக அரசு 17 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. அதிகப்பட்சமாக இந்த மையம் 3 மாதம் செயல்படும். தூத்துக்குடி மாவட்டத்தில் 6 மையங்கள் அமைக்கப்படுகிறது.

தமிழக அரசு விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது. தற்போது விவசாயிகளின் கால் நடைகளை பாதுகாக்க இதுவரை இல்லாத வகையில் புதிய திட்டம் ஒன்றை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இதன்படி மாநிலம் முழுவதும் மொத்தம் 175 இடங்களில் உலர் தீவன விற்பனை மையம் அமைக்க உத்தரவிட்டுள்ளது.

ஒரு மையத்திற்கு தலா 10 லட்ச ரூபாய் வீதம் மொத்தம் 17 கோடியே 50 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டு இந்த உலர் தீவன மையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளில் கால்நடை பராமரிப்புத்

துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகத்தில் நிலவும் வறட்சியை சமாளிக்கும் வகையில் கால்நடைகள் வளர்ப்போருக்கு குறைந்த செலவில் கால்நடை உலர் தீவனம் வழங்குவதற்கு உலர் தீவன மையம் புதியதாக துவக்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 6 இடங்களில் உலர் தீவன மையம் துவக்கப்படுகிறது. புதுக்கோட்டை, கருங்குளம், தென்திருப்பேரை, மெஞ்ஞானபுரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய கால்நடை மருந்தகங்களில் இந்த மையம் செயல்படும். பசு மற்றும் எருமை வளர்க்கும் விவசாயிகள் உலர் தீவன மையம் மூலமாக உலர் தீவனம் வாங்குவதற்கு தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி தங்களின்

ரேஷன்கார்டு நகலை காண்பித்து மனு செய்ய வேண்டும். பின்னர் அவர்களுக்கு உலர் தீவனம் வாங்குவதற்கு உரிய அடையாள அட்டை வழங்கப்படும். உலர் தீவன விற்பனை மையங்களில் ஒரு கிலோ உலர் தீவனம் இரண்டு ரூபாய் வீதம் அரசு மானிய விலையில் விற்பனை செய்யப்படும். ஒரு மாட்டிற்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் ஒருநபர் அதிகப்பட்சமாக 5 மாட்டிற்கு உலர் தீவனத்தை வாரந்தோறும் பெற்றுக் கொள்ளலாம்.

பெரிய விவசாயிகள் தங்கள் இருப்பில் உள்ள தீவனங்களை விற்பனை மையங்களுக்கு விற்பனை செய்ய விரும்புவோரும் அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி தங்களால் விற்பனை செய்யக் கூடிய உலர் தீவன விபரத்தினை தெரியப்படுத்தலாம் என்று மாவட்ட கலெக்டர் ரவிக்குமார், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் ராமசாமி ஆகியோர் கேட்டுக்

கொண்டுள்ளனர். இது குறித்து இணை இயக்குனர் ராமசாமி கூறுகையில், இன்னும் 20 நாளில் இந்த மையம் துவங்கிவிடும். அதிகப்பட்சமாக 3 மாதம் இந்த மையம் செயல்படும். தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தமட்டில் வைக்கோல், சோளத்தட்டை, மக்காச்சோள தட்டை போன்றவை தான் கிடைக்கும். தற்போது விவசாயிகளுக்கு உலர் தீவனம் எந்த வகையில் தேவை என்பது குறித்து சர்வே எடுத்து வருகிறோம். அதன்படி

தேவைக்கு ஏற்ப தீவனம் கொள்முதல் செய்வோம். இம் மாவட்டத்தில் விவசாயிகளிடம் தீவனம் அதிகமாக இருக்கிறதா என்பது குறித்து வேளாண்மை அதிகாரிகளிடம் விசாரிக்க சொல்லியுள்ளோம். கிடைத்தால் இங்கு கொள்முதல் செய்வோம். அல்லது வெளி மாவட்டங்களில் இருந்து கொள்

முதல் செய்வோம்.

கடந்த வாரம் தான் அரசாணை வந்தது. எப்படியும் இம் மாவட்டத்தில் இன்னும் 20 நாளில் கலெக்டர் அறிவுரையின் பேரில் இந்த மையம் துவக்கப்பட்டு விடும். மையத்தில் பத்து நாட்களுக்கு வழங்குவதற்கு தேவையான உலர் தீவனத்தை ஸ்டாக் வைத்திருக்க முடிவு செய்துள்ளோம். விவசாயிகளிடம் தீவனம் இருந்தால் உடனடியாக தெரிவித்தால் வாங்கி கொள்வோம் என்றார்.

## தர்மபுரியில் நெல் விளைச்சல்...அதிகரிப்பு பரிசுகளுடன் அரிசி விற்பனை

தர்மபுரி: நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து, பரிசு பொருட்களுடன் அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் கடந்தாண்டு போதிய பருவமழையில்லாதாதல் நெல் சாகுபடி பெருமளவு பாதிக்கப்பட்டு வந்தது. இதனால், மாநிலத்தில் அரிசி விலை கடுமையாக உயர்ந்தது. நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். தொடர்ந்து ஏறிவரும் விலையை அடுத்து, அரிசி வியாபாரிகள், வெளிமாநிலங்களில் இருந்து அரிசியை அதிகளவு கொள்முதல் செய்து பதுக்கி வந்தனர்.

இந்நிலையில், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை கர்நாடகா மாநிலத்தில்

அதிகளவில் பெய்தது காரணமாக மேட்டூர் அணைக்கு போதிய தண்ணீர் வந்தது. இதே போல், மேற்கு மண்டலங்களிலும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்தது.

இதையடுத்து, தமிழகத்தில் நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களான திருச்சி, தஞ்சவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சம்பா சாகுபடியில், நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. இதே போல், தர்மபுரி மாவட்டத்தில், 20 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்பட்டதுடன், நெல் விளைச்சலும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கடந்த சில தினங்களாக நெல் அறுவடை துவங்கியுள்ளது. நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள், ஒரு கிலோ நெல், 18 ரூபாய் முதல் கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், தமிழகத்தில் அரிசி விலை குறைய கூடிய நிலை ஏற்பட்டதால் அதிர்சி அடைந்த அரிசி வியாபாரிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள அரிசியை மளிகை கடைகாரர்களிடம் சலுகை விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களிடம் சலுகை விலையில், அரிசையை பெறும் மற்றும் மொத்த விற்பனை கடைகார்கள், டிப்பார்ட்மென்ட் ஸ்டோர் உரிமையாளர்கள், மளிகைகடைக்காரர்கள் கடந்த சில தினங்களாக அரிசி மூட்டைகளை பரிசு பொருட்களுடன் வழங்கி வருகின்றனர். தர்மபுரி நகரில் உள்ள பல கடைகளில், 25 கிலோ கொண்ட, ஒரு அரிசி மூட்டை, ஆயிரத்தி, 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு, ஐந்து லிட்டர் குக்கர், ஒரு கடயாய் அல்லது, 5 லிட்டர் சன் ப்ளவர் ஆயில், 3 கிலோ கோதுமை மாவு, ஒரு ப்ளாஸ்டிக் டப் ஆகியவை இலவசமாக வழங்குவதாக, கடைகளின் முன் விளம்பரம் செய்து, அரிசி வாங்குபவர்களுக்கு இலவச பொருட்களை அளித்து வருகின்றனர்

தமிழகத்தில், நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால், அரிசி விலை குறையா

வாய்புள்ளதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ள, கடைகளில் இலவச பொருட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அரிசி விற்பனையாளர் ஒருவர் கூறியது:

அரிசி மொத்த வியாபாரிகள் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட விலை ஏற்றத்தால், வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவு அரிசியை கொள்முதல் செய்தனர். இந்நிலையில், தற்போது தமிழகத்தில் இருந்து அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலை குறைந்து வருவதால், வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்து வைத்த அரிசியை, அவர்கள் கொள்முதல் செய்த விலையை விட சற்று கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர்

இதனால் கடந்த மாதம், 1,500 ரூபாய்க்கு மேல் விற்பனையான, 25 கிலோ கொண்ட அரிசியை மூட்டைகளை வியாபாரிகள், இலவச பொருட்களுடன் கடந்த சில தினங்களாக விற்பனை செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## தர்மபுரியில் நெல் விளைச்சல்...அதிகரிப்பு பரிசுகளுடன் அரிசி விற்பனை

தர்மபுரி: நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து, பரிசு பொருட்களுடன் அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் கடந்தாண்டு போதிய பருவமழையில்லாதாதல் நெல் சாகுபடி பெருமளவு பாதிக்கப்பட்டு வந்தது. இதனால், மாநிலத்தில் அரிசி விலை கடுமையாக உயர்ந்தது. நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். தொடர்ந்து ஏறிவரும் விலையை அடுத்து, அரிசி வியாபாரிகள், வெளிமாநிலங்களில் இருந்து அரிசியை அதிகளவு கொள்முதல் செய்து பதுக்கி வந்தனர்.

இந்நிலையில், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை கர்நாடகா மாநிலத்தில் அதிகளவில் பெய்தது காரணமாக மேட்டூர் அணைக்கு போதிய தண்ணீர் வந்தது.

இதே போல், மேற்கு மண்டலங்களிலும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்தது.

இதையடுத்து, தமிழகத்தில் நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களான திருச்சி, தஞ்சவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சம்பா சாகுபடியில், நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. இதே போல், தர்மபுரி மாவட்டத்தில், 20 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்பட்டதுடன், நெல் விளைச்சலும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கடந்த சில தினங்களாக நெல் அறுவடை துவங்கியுள்ளது. நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள், ஒரு கிலோ நெல், 18 ரூபாய் முதல் கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், தமிழகத்தில் அரிசி விலை குறைய கூடிய நிலை ஏற்பட்டதால் அதிர்சி அடைந்த அரிசி வியாபாரிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள அரிசியை மளிகை கடைகாரர்களிடம் சலுகை விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களிடம் சலுகை விலையில், அரிசையை பெறும் மற்றும் மொத்த விற்பனை கடைகார்கள், டிப்பார்ட்மென்ட் ஸ்டோர் உரிமையாளர்கள், மளிகைகடைக்காரர்கள் கடந்த சில தினங்களாக அரிசி மூட்டைகளை பரிசு பொருட்களுடன் வழங்கி வருகின்றனர். தர்மபுரி நகரில் உள்ள பல கடைகளில், 25 கிலோ கொண்ட, ஒரு அரிசி மூட்டை, ஆயிரத்தி, 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு, ஐந்து லிட்டர் குக்கர், ஒரு கடயாய் அல்லது, 5 லிட்டர் சன் ப்ளவர் ஆயில், 3 கிலோ கோதுமை மாவு, ஒரு ப்ளாஸ்டிக் டப் ஆகியவை இலவசமாக வழங்குவதாக, கடைகளின் முன் விளம்பரம் செய்து, அரிசி வாங்குபவர்களுக்கு இலவச பொருட்களை அளித்து வருகின்றனர்

தமிழகத்தில், நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால், அரிசி விலை குறையா வாய்புள்ளதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ள, கடைகளில் இலவச

பொருட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அரிசி விற்பனையாளர் ஒருவர் கூறியது:

அரிசி மொத்த வியாபாரிகள் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட விலை ஏற்றத்தால், வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவு அரிசியை கொள்முதல் செய்தனர். இந்நிலையில், தற்போது தமிழகத்தில் இருந்து அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலை குறைந்து வருவதால், வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்து வைத்த அரிசியை, அவர்கள் கொள்முதல் செய்த விலையை விட சற்று கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர்

இதனால் கடந்த மாதம், 1,500 ரூபாய்க்கு மேல் விற்பனையான, 25 கிலோ கொண்ட அரிசியை மூட்டைகளை வியாபாரிகள், இலவச பொருட்களுடன் கடந்த சில தினங்களாக விற்பனை செய்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## செங்கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்ததால் விலை...கிடுகிடு! பெங்களூரு வியாபாரிகள் வருகைக்காக காத்திருப்பு

சேலம்: தமிழகத்தில், கடந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக, செங்கரும்பு விளைச்சல் குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் குறைந்த அளவில் பயிரிடப்பட்டுள்ள செங்கரும்பு, பெங்களூரு வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

தமிழகத்தில் கடந்த ஆண்டு, தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு இல்லாததால் கடும் வறட்சி நிலவியது. செங்கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும், கம்பம், தேனி, தஞ்சாவூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நீர் நிலைகளில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால், விவசாய பணிகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

பொங்கல் பண்டிகையை எதிர்பார்த்து பயிரிடப்படும் செங்கரும்பில், விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டவில்லை. தமிழகத்தில், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், செங்கரும்பின் பயிரிடும் பரப்பளவு, 50 சதவீதம் அளவுக்கு குறைந்து உள்ளது.

சேலம் மாவட்டத்தில் சித்தர்கோவில், பெருமாம்பட்டி, முருகப்பட்டி, இளம்பிள்ளை, வாழப்பாடி பகுதிகளில் அதிக அளவு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கரும்பு பயிரிடப்படுவது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக குறைந்த அளவிலேயே செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த பகுதிகளில் செங்கரும்பு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. வழக்கமாக இந்த பகுதிகளில் விளையும் செங்கரும்புகளை பெங்களூரு, மதுரை, திருநெல்வேலி, சென்னை வியாபாரிகளே அதிக அளவு வாங்கிச் செல்வது வழக்கம். ஆனால், நடப்பாண்டு செங்கரும்பின் விலை உயர்ந்ததால், வியாபாரிகள் கரும்பு தோட்டங்களை குத்தகைக்கு எடுக்க தயக்கம் காட்டி வருகின்றனர். பொங்கல் பண்டிகை, வெளியூர் வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து, சேலம் மாவட்ட விவசாயிகள் செங்கரும்புகளை அறுவடை செய்யாமல் காத்து இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு, டிசம்பர் கடைசி வாரத்தில், முதல் ரக கரும்பு ஒன்று, 15 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 10 ரூபாய்க்கும், 20 கரும்புகளை கொண்ட கட்டு, முதல் ரகம், 300 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 200 ரூபாய்க்கும், 30 கட்டுக்களை கொண்ட ஒரு லோடு, 5,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

அதுவே தற்போது முதல் ரகம், 30 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 20 ரூபாய்க்கும், கட்டு முதல் ரகம், 600 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 400 ரூபாய்க்கும், லோடு கரும்பு, 10,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில், செங்கரும்பின் விலை மேலும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

சித்தர்கோவிலை சேர்ந்த செங்கரும்பு மொத்த வியாபாரி சுரேஷ் கூறியதாவது: கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது, சித்தர் கோவில் பகுதியில் அதிக அளவில் செங்கரும்பு பயிரிடப்பட்டு இருந்ததால், பெங்களூரு, சென்னை வியாபாரிகளின் வருகை அதிகரித்தது. டிசம்பர், மூன்றாவது வாரமே அறுவடை துவங்கியது.

ஆனால், நடப்பாண்டு விளைச்சல் பாதித்துள்ள நிலையில், வெளியூர் வியாபாரிகளின் வருகையும் எதிர்பார்த்த அளவு இல்லை. விளைச்சல் பாதிப்பால் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

பொங்கல் பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக கரும்பு ஒன்று, 50 ரூபாய்க்கும், ஜோடி, 100 ரூபாய்க்கும் விற்பனை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றார்.

கோமாரி நோய்க்கு காலாவதியான மருந்து விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் "பகீர்'

சேலம்: சேலம் மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்புக்கு, காலாவதியான மருந்து வழங்கப்பட்டதாகவும், அந்த மருந்தால் மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது.

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் மகரபூஷணம் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் சுந்தர், கால்நடைத்துறை இணை இயக்குனர் சிவப்பிரகாசம் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், சேலம் மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதலால், அதிகப்படியான மாடுகள் இறந்துள்ளன. ஆனால், குறைந்த எண்ணிக்கையே கணக்கு காட்டப்படுகிறது. காலாவதியான மருந்தை, மாடுகளுக்கு வழங்கியதால், இந்நோய் தாக்கம் பரவியிருப்பதாக கருதுகிறோம். மேலும், வெளிமாநிலங்களில் இருந்து

வாங்கி, இலவசமாக வழங்கப்பட்ட மாடுகள் மூலமும், நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரணம், ஏற்காடு தேர்தல் வந்ததால், பெரும்பாலான விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. அவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனுமதியின்றி கட்டப்பட்ட தடுப்பணைகளை அகற்ற வேண்டும், என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

கால்நடைத்துறை இணை இயக்குனர் பேசுகையில், ""கோமாரி நோய் தடுப்பு மருந்து, 2015ம் ஆண்டு வரை காலக்கெடு உள்ளது. அந்த மருந்தால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. சீதோஷ்ண நிலைமாற்றம், ஒரே இடத்தில் தண்ணீர் தேங்கி நிற்பதால், மாடுகளுக்கு இந்நோய் வர வாய்ப்புள்ளது. கோமாரி நோய் கட்டுப்படுத்தும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது,'' என்றார்.

வேளாண் இணை இயக்குனர் பேசுகையில், ""வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது,'' என்றார்.

### செங்கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்ததால் விலை...கிடுகிடு! பெங்களூரு வியாபாரிகள் வருகைக்காக காத்திருப்பு

சேலம்: தமிழகத்தில், கடந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக, செங்கரும்பு விளைச்சல் குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் குறைந்த அளவில் பயிரிடப்பட்டுள்ள செங்கரும்பு, பெங்களூரு வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

தமிழகத்தில் கடந்த ஆண்டு, தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு இல்லாததால் கடும் வறட்சி நிலவியது. செங்கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும், கம்பம், தேனி, தஞ்சாவூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நீர் நிலைகளில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால், விவசாய பணிகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

பொங்கல் பண்டிகையை எதிர்பார்த்து பயிரிடப்படும் செங்கரும்பில், விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டவில்லை. தமிழகத்தில், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், செங்கரும்பின் பயிரிடும் பரப்பளவு, 50 சதவீதம் அளவுக்கு குறைந்து உள்ளது.
சேலம் மாவட்டத்தில் சித்தர்கோவில், பெருமாம்பட்டி, முருகப்பட்டி, இளம்பிள்ளை, வாழப்பாடி பகுதிகளில் அதிக அளவு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கரும்பு பயிரிடப்படுவது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக குறைந்த அளவிலேயே செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த பகுதிகளில் செங்கரும்பு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. வழக்கமாக இந்த பகுதிகளில் விளையும் செங்கரும்புகளை பெங்களூரு, மதுரை, திருநெல்வேலி, சென்னை வியாபாரிகளே அதிக அளவு வாங்கிச் செல்வது வழக்கம். ஆனால், நடப்பாண்டு செங்கரும்பின் விலை உயர்ந்ததால், வியாபாரிகள் கரும்பு தோட்டங்களை குத்தகைக்கு எடுக்க தயக்கம் காட்டி வருகின்றனர். பொங்கல் பண்டிகை, வெளியூர் வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து, சேலம் மாவட்ட விவசாயிகள் செங்கரும்புகளை அறுவடை செய்யாமல் காத்து இருக்கின்றனர்.
கடந்த ஆண்டு, டிசம்பர் கடைசி வாரத்தில், முதல் ரக கரும்பு ஒன்று, 15 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 10 ரூபாய்க்கும், 20 கரும்புகளை கொண்ட கட்டு, முதல் ரகம், 300 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 200 ரூபாய்க்கும், 30 கட்டுக்களை கொண்ட ஒரு லோடு, 5,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.
அதுவே தற்போது முதல் ரகம், 30 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 20 ரூபாய்க்கும், கட்டு முதல் ரகம், 600 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 400 ரூபாய்க்கும், லோடு கரும்பு, 10,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில், செங்கரும்பின் விலை மேலும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.
சித்தர்கோவிலை சேர்ந்த செங்கரும்பு மொத்த வியாபாரி சுரேஷ் கூறியதாவது: கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது, சித்தர் கோவில் பகுதியில் அதிக அளவில் செங்கரும்பு பயிரிடப்பட்டு இருந்ததால், பெங்களூரு, சென்னை

வியாபாரிகளின் வருகை அதிகரித்தது. டிசம்பர், மூன்றாவது வாரமே அறுவடை துவங்கியது.

ஆனால், நடப்பாண்டு விளைச்சல் பாதித்துள்ள நிலையில், வெளியூர் வியாபாரிகளின் வருகையும் எதிர்பார்த்த அளவு இல்லை. விளைச்சல் பாதிப்பால் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பொங்கல் பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக கரும்பு ஒன்று, 50 ரூபாய்க்கும், ஜோடி, 100 ரூபாய்க்கும் விற்பனை செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றார்.

### டிச.,26ல் விவசாயி குறைதீர் கூட்டம்

நாமக்கல்: "விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், டிசம்பர், 26ம் தேதி நடக்கிறது' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், டிசம்பர், 26ம் தேதி, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், காலை, 10.30 மணிக்கு நடக்கிறது.

இக்கூட்டத்தில், விவசாயிகள் பங்கேற்று, விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்வதுடன், விவசாயம் தொடர்பான குறைகள் ஏதாவது இருந்தால், அவற்றை தெரிவித்து, உரிய நிவாரணம் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஆடு வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்க அழைப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணை பகுதியில் அமைந்துள்ள இந்திய வங்கி சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில், ஆடு வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

பயிற்சி நிறுவன இயக்குனர் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை:

கிருஷ்ணகிரி அடுத்த, கே.ஆர்.பி., அணை பகுதியில், இந்தியன் வங்கி சுய வேலை

வாய்ப்பு பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு சுய தொழில் துவங்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு, சான்றிதழுடன் கூடிய தொழில் முனைவோருக்கான பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது.

தற்போது, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, 20 ஆண்கள் மற்றும் பெண்கள் காளான் வளர்ப்பு பயிற்சி பெற்று வருகின்றனர். இதுவரை, இப்பயிற்சி நிறுவனத்தில், 276 பேர் பல்வேறு பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

இங்கு, வரும், 26ம் தேதி, ஆடு வளர்ப்பு பயிற்சிகள் துவங்கவுள்ளது. தமிழில் எழுதப்படிக்க தெரிந்த சுய தொழில் துவங்க ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் பயிற்சியில் பங்கு பெறலாம். சுய உதவிக்குழுக்கள், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பயிற்சியிகள் அனுபவமும் திறமையும் வாய்ந்த வல்லுனர்களை கொண்டு நடத்தப்படுகிறது. பயிற்சியோடு தொழிலுக்கான வங்கிகள் வழங்கும் சேவைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற பயனுள்ள வாழ்வியல் திறன்கள் வழங்கப்படும்.

இத்துடன் காணொலி காட்சி செயல்முறை விளக்கங்கள், இணையதளம் வாயிலாக நவீன பயிற்சி அனுபவங்களை பெறலாம். பயிற்சி காலத்தில் மதிய உணவு பயிற்சி நிறுவனத்தல் வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். இத்துடன் தொழில் துவங்க வழிகாட்டுதல் ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகள் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும்.

பயிற்சியில், சேர ஆர்வமுள்ளவர்கள் பெயர் முகவரி, பெற விரும்பும் பயிற்சி மற்றும் மொபைல் ஃபோன் எண்ணுடன் விண்ணப்பங்களை உடனடியா அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கோமாரி நோய் தாக்கம் குறைந்ததாக ஆறுதல் "23 நாட்களாக கால்நடைகள் இறப்பு இல்லை'**

ஈரோடு: ""கோமாரி நோய் தாக்குதலின் தாக்கம், தற்போது முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த, 23 நாட்களாக கால்நடைகள் இறப்பு, ஈரோடு மாவட்டத்தில் இல்லை," என, கால்நடை பராமரிப்பு துணை இயக்குனர் டாக்டர் பிரகாஷம் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் கோமாரி நோய் தாக்கத்தால், மாவட்டம் தோறும் பல நூறு கால்நடைகள் இறந்தன. இதனால், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பெரும் பாதிப்பை சந்தித்தனர். கால்நடை பாராமரிப்பு துறை சார்பில், தமிழகம் முழுவதும் சிறப்பு மருத்துவ குழுக்கள் சிகிச்சை வழங்கினர்.

ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 3.50 லட்சம் தடுப்பூசி போடப்பட்டது. இருந்தும், பல நூறு மாடுகள் இறந்தன.

கடந்த செப்., 20ம் தேதி, பெருந்துறை அருகே, வாய்க்கால்மேடு பகுதியை சேர்ந்த கருப்புசாமி, 50, என்பவரது, ஐந்து மாடுகள், கால், வாய்ப்புண்ணால் ஒன்றன்பின் ஒன்றாக இறந்தது.

நசியனூர் டவுன் பஞ்சாயத்து, தயிர்பாளையம், வேட்டை பெரியாம்பாளையம், ஆட்டையாம்பாளையம், ஆழுச்சாம்பாளையம் பகுதியில், கோமாரி நோயால் கால்நடைகள் இறப்பு சதவீதம் அதிகரித்தது.

இந்நிலையில், ஈரோடு மாவட்டத்தில், "ஆவின்' நிறுவனம் சார்பில், கிராமப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள, 800க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம், 37,000 உறுப்பினர்களின் கால்நடைகளுக்கும், கால்நடைத்துறையினர் உதவியுடன் பரிசோதனை மேற்கொண்டனர். தடுப்பூசி போடுதல், அறிகுறிகள் தென்பட்டால், சிகிச்சை வழங்குதல் போன்றவைகளில் ஈடுபட்டனர்.

தவிர, மாவட்ட நிர்வாகம் சார்பில், கால்நடை சந்தைகளுக்கும், பிற மாவட்டம், மாநிலங்களில் இருந்து மாடுகள் கொண்டு வர தடை விதிக்கப்பட்டது. இதனால், இறப்பு சதவீதம் படிப்படியாக குறையத்துவங்கியது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் டாக்டர் பிரகாஷம் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில், கோமாரி நோய் தாக்குதல் முற்றிலும் குறைந்து விட்டது. கடந்த நவம்பர், 26ம் தேதிக்கு பின், தற்போது, 23 நாட்களாக கால்நடைகள் இறப்பே இல்லை. கால்நடை மருத்துவர்கள், வீடு வீடாக சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசியும், மருந்து, மாத்திரை கொடுத்து வருகின்றனர், என்றார்.

பாரம்பரிய சாகுபடியால் பயன் அதிகம்: இயற்கை வேளாண் விஞ்ஞானி தகவல்

திருத்துறைப்பூண்டி: ""பாரம்பரிய நெல் சாகுபடியால் மட்டுமே, விவசாயிகளுக்கு விளைச்சலும், பயனும் அதிகம் கிடைக்கும். அதனால் இம்முறைக்கு விவசாயிகள் அனைவரும் மாற வேண்டும்," என திருத்துறைப்பூண்டியில் இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் இயற்கை வேளாண்மை மற்றும் பயிற்சி மையம், ஆராய்ச்சி மையத்தில், பாரம்பரிய நெல் சாகுபடி முறையை, இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

காவிரி டெல்டா மாவட்டங்களில் தஞ்சை, திருவாரூர், நாகையில் இயற்கை வேளாண்மையில், பாரம்பரிய நெல் சாகுபடி முறை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் நடப்பாண்டு களையை கட்டுப்படுத்த, 3 முறை களைக்கொல்லி தெளிப்பும், 2 முறை களையை ஆள் வைத்தும் விவசாயிகள் அகற்றியுள்ளனர்.

இதன் பின் பயிருக்கு மேல் வளர்ந்திருந்த களையை வெட்டி அகற்றியுள்ளனர். இதற்கும் போதிய கூலி ஆள் கிடைக்கவில்லை. அரசு வழங்கிய களைக்கொல்லி மருந்து மூலம் பயன் ஏற்படவில்லை. இதனால் பயிர்களை விட உயரமாக களை வளர்ந்து, சாகுபடி பாதித்துள்ளது.

ஒரு ஏக்கருக்கு நெல் அறுவடை நீங்கலாக, 19,800 ரூபாயை விவசாயிகள் செலவு செய்துள்ளனர். ஏக்கருக்கு, 30 மூட்டை விளைந்தால், 23,760 ரூபாய் கிடைக்கும். நிகர லாபம், 3,960 ரூபாய் மட்டுமே விவசாயிக்கு சென்று சேரும். நடப்பாண்டு களையை கட்டுப்படுத்த மட்டுமே அதிகம் செலவாகியுள்ளது.

இச்சூழலில், ஒருங்கிணைந்த வேளாண்மை முறையில் ஆடு, மாடு, கோழி, மீன்வளர்ப்பு, காளான் வளர்ப்பு பணியிலும் ஈடுபட வேண்டும். பாரம்பரிய நெல் சாகுபடி முறையில் விளைச்சலும், லாபமும் அதிகரித்துள்ளது. டெல்டாவுக்கு ஏற்ற ரகமான, மாப்பிள்ளை சம்பா, காட்டு யானம், கவுணி, சம்பா மோசனம், பனங்காட்டு குடவாழை உள்ளிட்ட ரகங்களை, அறுவடை காலத்திலேயே, ஒற்றை நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு, 2 கிலோ வீதம் வாங்கி விதையாக பத்திரப்படுத்த வேண்டும். மேலும் விவசாயிகள், வியாபாரிகளாகவும் இனி மாற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.பேட்டியின் போது நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## 7, 000 ஏக்கர் பயிர்கள் கருகல்நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

விருதுநகர்: அருப்புக்கோட்டை பகுதியில் மழை பொய்த்ததால், 7, 000 ஏக்கரில் விதைக்கப்பட்ட கம்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்கள்<, வளர்ச்சி அடையாமல் கருகி விட்டன. கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகளுக்கு, மாவட்ட நிர்வாகம் நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயி ஒருவர், வலியுறுத்தினார். விருதுநகர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., முனுசாமி, சிவகாசி ஆர்.டி.ஓ., கீர்த்தி பிரியதர்ஷனி உட்பட பல் துறை அதிகாரிகள்

விவசாயிகள் விவதாம்:ஜெயபாலன் (அருப்புக்கோட்டை): ஆமணக்குநத்தம், கல்லுப்பட்டி குருந்தமடம், வெள்ளையாபுரம், திருவிருந்தள்பரம் பகுதிகளில், 7, 000 ஏக்கரில், கம்பு, சோளம், பருத்தி, மக்காச்சோளம் மற்றும் பயறு வகைகள் பயரிடப்பட்டுள்ளது. பருவ மழை பொய்த்ததால், பயிர்கள் வளர்ச்சி அடையாமல் கருகி விட்டன. இதற்காக, விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டறவு கடன் சங்கம் மற்றும் தனியார் வங்கிகளில், கடன் பெற்று, ஏக்கருக்கு 12, 000 ரூபாய் செலவு செய்துள்ளனர். விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் .(அப்போது முழுமையாக வளர்ச்சி அடையாத மக்காச்சோள பயிரை காட்டினார்).ராமச்சந்திர ராஜா (ராஜபாளையம்): ஸ்ரீவில்லி புத்தூர், ராஜபாளையம் பகுதியில் வீரிய ஒட்டு ரக விதைகள் (தக்காளி, வெண்டைக்காய், மிளகாய், பல்லாரி) விற்கப்படுகின்றன. 100 கிராம் அளவுள்ள பாக்கெட் 360 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த விதைகள் தரமில்லாததால், முழுமையாக வளர்ச்சி அடையவில்லை. இதை தோட்டக்கலை துறை சார்பில் ஆய்வு நடத்தி, போலி விதைகளை தடை செய்ய வேண்டும். "கோமாரி நோயை' தடுக்க, கால்நடைகளுக்கு மழை காலத்திற்கு முன் ,தடுப்பூசி போட வேண்டும் . கலெக்டர் ஹரிஹரன்: சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு நடத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும். எஸ்.பி., க்கு அறிவுறுத்தப்பட்டு, போலீசார் மூலம் வழக்கு பதிய கூறப்படும்.

கால்நடை துறை அதிகாரி: கால்நடைகளுக்கான சிறப்பு முகாமில், 70 சதவீத மாடுகளுக்கு தடுப்பூசி போட்டு செல்கின்றனர். 30 சதவீதத்தினர், முகாமிற்கு மாடுகளை கொண்டு வருவதில்லை. நோய் தாக்குதல் குறித்து தகவல் தெரிந்தால், மாடுகளுக்கு உடனடி சிகிச்சை அளிக்கப்படும் .

மாற்று விவசாயத்தில்தென்னை விவசாயகள்கொள்முதல் நிலையம் இல்லாததால் தவிப்பு:அரசு சலுகைகள் கிடைக்காததால் மனமாற்றம்

ராஜபாளையம்:விருதுநகர் மாவட்டத்தில், அழிந்து வரும் தென்னை விவசாயத்தை பாதுகாக்க, மத்திய, மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கொப்பரை தேங்காய் கொள்முதல் நிலையம், காப்பீடு, கன்று நட மானியம், சொட்டுநீர் பாசன

தொழில்நுட்பம் போன்ற வசதிகள் இல்லாமல், நலிந்து வரும் விவசாயிகள், மாற்று விவசாயத்தை நாடும் நிலையில் உள்ளனர்.

மாவட்டத்தில் பல இடங்களில், தென்னை விவசாயம் நடக்கிறது. மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாக்களில், தென்னை விவசாயம் அதிகம். இங்கு மட்டும், ஏறக்குறைய 20 ஆயிரம் எக்டேரில், இந்த விவசாயம் நடக்கிறது. கடந்த இருஆண்டுகளாக, இந்த பகுதிகளில் மழை அளவு குறைந்து வருவதால், வறட்சி ஏற்பட்டு, தென்னை விவசாயம் கேள்விக்குறியாக உள்ளது. ஒரு தென்னை மரத்தின் ஆயுள்காலம் 60 ஆண்டுகள், தற்போதைய வறட்சியால் , 25 முதல் 30 ஆண்டு மரங்கள் கூட பட்டு போகின்றன. போதிய நிலத்தடி நீர் கிடைக்காததால், உற்பத்தி குறைந்து, தேங்காய் தரம் மற்றும் அளவும் குறைந்து உள்ளது. கொப்பரை தேங்காய்க்கான, அரசு கொள்முதல் நிலையம், மாவட்டத்தில் இல்லை. இதனால், குறைந்த விலைக்கு, விற்கவேண்டிய கட்டாயம் உள்ளது. வெளிமார்க்கெட்டில் மட்டும், தேங்காய் மற்றும் எண்ணெய் விலை உயர்ந்துகொண்டே செல்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்புவரை, விருதுநகர் மாவட்டத்தில் இருந்து வடமாநிலங்களுக்கு, தேங்காய் லாரிகளில் செல்லும். தற்போது இந்த இடத்தை ஆந்திரா மற்றும் கர்நாடகம் பிடித்து உள்ளது.

அங்கு, அடுத்தடுத்த புயல்களால் ஏற்படும் மழையை பயன்படுத்தி, நவீன தொழில்நுட்பத்தில் விவசாயம் செய்கின்றனர். இருமாநிலங்களில் இருந்தும், வடமாநிலங்களுக்கு காய்கள் செல்வதால், விருதுநகர் மாவட்டம் பின்னுக்கு சென்று உள்ளது. மேலும், தமிழகத்தில் இருந்து செல்லும் காய்களுக்கு, லாரி வாடகை அதிகம் என்பதால், தென்னை விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக நெருக்கடியை சந்தித்து வந்தனர்.

ராஜபாளையம் பகுதியில், தென்னை விவசாயத்தில் ஈடுபட்டு வந்தவர்கள், வறட்சியால், மா விவசாயத்திற்கு மாறி வருகின்றனர்.

பல ஆண்டு கழித்து பலன் தரும் தென்னையை விட, ஐந்து ஆண்டுகளில் சீசனுக்கு மட்டும் பலன் தரும், மா விவசாயம் மேல் என, விவசாயிகள் கருதுகின்றனர்.

இதனிடையே,மரம் அறுக்கும் மில்களில், தற்போது தென்னை மர தடிகள் அதிகம் காணப்படுகின்றன.

ராஜபாளையம் ராமசந்திர ராஜா, ""கொப்பரை தேங்காய்க்கான மத்திய அரசின் கொள்முதல் நிலையம், விருதுநகர் தவிர மற்ற மாவட்டங்களில் உள்ளது. இங்கு, கிலோ 57 ரூபாய்க்கு விலை போகிறது. வெளிமார்க்கெட்டில் இந்த விலை கிடைக்கவில்லை. தென்னைக்கான அரசு காப்பீடு திட்டம், தமிழகத்தில் பல மாவட்டங்களில் செயல்படாமல் உள்ளது. இயற்கை சீற்றத்தினால் பாதிப்பு ஏற்படும்போது, விவசாயிகள் கடுமையாக பாதிக்கின்றனர். தென்னை நீண்டகால பயிர், கற்பக தரு என்பார்கள்.

நீர் தேவையை பூர்த்தி செய்யாததால், பட்டு போகிறது. பட்டுபோன மரங்களை அகற்றி, புதியகன்றுகள் நட, அரசு மானியம் இல்லை. இதனால், மாற்று விவசாயத்திற்கு மாறும்நிலை உள்ளது. மத்திய அரசின் தென்னை வாரிய மானியம் வேண்டும் என்பது, நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. சொட்டுநீர் பாசன மானியம் போன்ற தொழில்நுட்பம், விவசாயிகளை

சென்றடையவில்லை,"என்றார். மம்சாபுரம் விவசாயி கந்தையா,"" கடும் வறட்சியால், தென்னை மரங்கள் காய்ந்து வருகிறது. அதையும் மீறி, விவசாயம் செய்தாலும், தேங்காய்களுக்கு விலை கிடைக்காத நிலை உள்ளது.

விவசாயிகளிடம் ஒரு காய் ஏழு ரூபாய்க்கு, மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்து, வெளியில் 15 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். போதிய வருமானம் இல்லாததால் பலர், கொய்யா , மா மரங்களை விவசாயத்திற்கு மாறி விட்டனர். செண்பகதோப்பு பகுதியில் மான், காட்டு பன்றி போன்ற விலங்குகளால், அந்த விவசாயத்திற்கு, மாறவும் முடியாமல் பரிதவிக்கிறோம்," என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அமெரிக்க மக்காச்சோளம் சீனா திருப்பி அனுப்பியது



பீஜிங்: தரம் குறைந்த தானியத்தை ஏற்க முடியாது என்று அமெரிக்கா அனுப்பிய 45 ஆயிரம் டன் மக்காச்சோளத்தை திருப்பி அனுப்பியது சீனா.சீன அரசு மரபணு மாற்றியமைக்கப்பட்ட தானியங்கள் உற்பத்தியை ஊக்குவித்துவருகிறது. எந்தெந்த இனவகையில் உள்ள மரபணு மாற்றியமைக்கப்பட்ட விதைகளை பயன்படுத்தலாம் என்று அது வரையறை செய்துள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் இருந்து 45 ஆயிரம் டன் மக்காச்சோளம் வந்தது. இதை ஏற்க முடியாது என்று சீன அதிகாரிகள் கூறிவிட்டனர்.

சீன விவசாய நிபுணர்கள் வரையறுத்த மரபணு மாற்றியமைக்கப்பட்ட வகைகளில் இல்லாத எம்ஐஆர் 162 என்ற விதை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மக்காச்சோளத்தை தான் அமெரிக்கா அனுப்பியிருந்தது.

நாங்கள் அங்கீகரிக்கப்படாத வகையில் இது உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதை அனுமதித்தால் சீனாவில் உள்ள மக்காச்சோள உற்பத்தி பாதிக்கப்படும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். அதனால் நாங்கள் இதை ஏற்க முடியாது' என்று கூறிவிட்டனர் சீன அதிகாரிகள்.

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லா கடன்**

புதுடெல்லி: கரும்பு விவசாயிக ளுக்கு சர்க்கரை ஆலைகள் நிலுவையில் வைத்துள்ள பணத்தை உடனே கொடுக்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில், கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை வழங்குவதற்காக சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லாத கடனாக 7,500 கோடி வழங்கிட மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், இதற்கான அனுமதியை அரசு வழங்கும் என்று மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் சரத்பவார் கடந்த 2 வாரங்களுக்கு முன் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக, மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.வி.தாமஸ் நேற்று கூறுகையில், 'பிரச்னையில் சிக்கியுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லாத கடன் வழங்கிட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது' என்றார்.

**விலை அதிகரிப்பால் மிளகாய் விற்பனை சரிவு**

சேலம், : மிளகாய் விலை கடந்த இரண்டு வாரங்களில் ரூ15 வரை அதிகரித்துள்ளது. இதனால் மிளகாய் விற்பனை கணிசமான அளவில் குறைந்துள்ளது.

சேலம் மார்க்கெட்டிற்கு ஆந்திர மாநிலம் டும்கூரில் இருந்து மிளகாய் விற்பனைக்கு வருகிறது. மிளகாய் வரத்து குறைந்துள்ளதால், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் மிளகாய் விலை ரூ15 வரை உயர்ந்துள்ளது. தற்போது காம்பு உள்ள மிளகாய் கிலோ ரூ90 வரையிலும், காம்பு இல்லாத மிளகாய் கிலோ ரூ70

வரையிலும் விற்கப்படுகிறது. மேலும் பரமக்குடியில் இருந்து விற்பனைக்கு வரும் குண்டு மிளகாய் கிலோ ரூ60 வரையிலும் விற்கப்படுகிறது.

இந்த விலை உயர்வு ஜனவரி மாதம் இறுதி வரை நீடிக்கும். வரும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்கள் மிளகாய் சீசனாகும். அப்போது வேண்டுமானால் மிளகாய் விலை கிலோவுக்கு ரூ15 வரை குறைய வாய்ப்பு உள்ளது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயத்தை மேம்படுத்த அரசை நம்பி இருக்கக்கூடாது விவசாயிகளுக்கு நம்மாழ்வார் அறிவுரை

திருத்துறைப்பூண்டி, :விவசாயிகள் விவசாயத்தை மேம்படுத்த இனியும் அரசாங்கத்தை நம்பி இருக்கக்கூடாது என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தெரிவித்தார். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் இயற் கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தில் (தனியார்) பாரம்பரிய நெல் சாகுபடியை இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பார்வையிட் டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், வேளாண்மைக்கு அரசு போடுகிற திட்டத்தால் அதிகாரிகள் நலமுடன் இருக்கிறார்கள். விவசாயிகளுக் கான டீசல் விற்பவர், தார்ப்பாய் விற்பவர், டிராக் டர், உரம் விதை, ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து விற்பவர் என அனைவரும் கோடீஸ்வரராக உள்ளனர். ஆனால் விவசாயிகள் கடனாளியாகி வங்கி தொல்லையால் தற்கொலை செய்து கொள்கின்றனர். இந்தாண்டு சாகுபடியில் களையை கட்டுப்படுத்தவே பெருமளவு செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தீர்வு களைகொல்லி அல்ல. பாரம்பரிய நெல் சாகு படி செய்யும்போது களை யைவிட நெல் பயிர் வேக மாக வளர்ந்து, களை வளர்ச்சிக்கு சூரிய ஒளியை தடுப்பதால் பயிருக்கு கீழே வளர்ச்சி குன்றுகிறது. இதனால் களை பிரச்னை ஏற்படுவதில்லை. இதனால் விவசாயிகள் பாரம்பரிய நெல் சாகுபடி செய்ய வேண் டும். விவசாயிகள் விவசாயத்தை மேம்படுத்த இனியும் அரசாங்கத்தை நம்பி

இருக்கக்கூடாது. விதை முதல் இடு பொருள் வரை நம்மிடம் இருக்க வேண்டும். பாரம்பரிய நெல் சாகுபடியை இயற்கை வேளாண்மை செய்து ஒருங்கிணைந்த வேளாண்மையாக ஆடு, மாடு, கோழி, மீன் வளர்ப்பு, காளாண் வளர்ப்பு, அசோலா வளர்ப்புகளில் விவசாயிகள் இறங்க வேண்டும். டெல்டா மாவட்டத்தில் பாரம்பரிய நெல் சாகுபடியில் ஓங்கி வளர்ந்த களையெல்லாம் தாண்டி வளர்ந்து கதிர்விட்டு அறுவடைக்கு தயாராக உள்ளது. அக்கம் பக்கத்தில் உள்ள விவசாயிகள் டெல்டா மாவட்டத்திற்கு ஏற்ற ரகமான மருத்துவ குணங்கொண்ட மாப்பிள்ளை சம்பா, காட்டுயாணம், கவுணி, சம்பாமோசனம், பனங்காட்டு குடவாழை, மடுமுழுங்கி, சேலம் சன்னா, இலுப்பைபூ சம்பா, பூங்கார் போன்ற ரகங்களை இப்போதே அறுவடை காலத்திலேயே ஒற்றை நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வாங்கி விதையாக பாதுகாத்து கொள்வது அவசியமானது. விவசாயிகள் நெல்லை உற்பத்தி செய்யும் நபராக மட்டும் இருக்கக்கூடாது. அதை மதிப்புக் கூட்டு விதையாகவும், அவல், அரிசி மாவு என விற்பதன் மூலம் வியாபாரியாக வேண்டும். அப்போது தான் இடைதரகர்களை ஒழிக்க முடியும் என்றார். நமது நெல்லை காப் போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், இயற்கை விவசாயி சிவசுப்பிரமணியன், கிரியேட் ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்குமார், சான்லால் உடனி ருந்தனர்.

**நடப்பு சம்பா பருவத்திற்காக 174 நேரடி நெல் கொள்முதல் நிலையம்**

திருவாரூர், : திருவாரூர் கலெக்டர் நடராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்திற்காக திருவாரூர் தாலுகாவில் 8, நன்னிலம் தாலுகாவில் 15, குடவாசல் தாலுகாவில் 35, வலங்கைமான் தாலுகாவில் 16, மன்னார்குடி தாலு காவில் 58, நீடாமங்கலம் தாலுகாவில் 20, திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 22 என மொத்தம் 174 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இன்று (20ம் தேதி) முதல் திறக்கப்படுகின்றன. இந்த கொள் முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து 20 சதம் வரையிலான நெல்

கொள்முதல் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு ஈரப்பதம் உள்ள நெல்லுக்கு குவிண் டால் ஒன்றுக்கு பிடித்தமாக 17 முதல் 18 சதம் வரை யிலான ஈரப்பதம் உள்ள சன்னரக நெல்லுக்கு ரூ.15. 60, பொது ரக நெல்லுக்கு ரூ.15, 18 முதல் 19 சதம் வரையிலான ஈரப்பதம் உள்ள சன்னரக நெல்லுக்கு ரூ.31.15, பொதுரக நெல்லுக்கு ரூ.29.95, 19 முதல் 20 சதம் வரையிலான ஈரப்பதம் உள்ள சன்னரக நெல்லுக்கு ரூ.46.70, பொதுரக நெல்லுக்கு ரூ.44.90 பிடித்தம் செய்யப்படும். எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் அரசு கொள்முதல் நிலையத்தில் தங்களது நெல்லை விற்று பயன்பெறலாம்.

**விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு கருவிகள் வழங்கல்**

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் ஒன்றியம் பகண்டைகூட்ரோடு அடுத்த நூரோலை மற்றும் மேலப்பழங்கூர் கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது. வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தாமோதிரன் வரவேற்றார். மேலப்பழங்கூர் ஊராட்சி மன்ற தலைவர் முத்துராஜா, வட்டார கல்வி குழு உறுப்பினர் தண்ட பாணி, மாவட்ட கவுன்சிலர் புனிதா, ஒன்றிய கவுன்சிலர் ரத்தினம் விஜயமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு கருவிகளை வழங்கினார். மண் தரத்தை பரிசோதித்து அங்கு என்ன பயிர் செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி அலுவலர் ஆனந்தன் கூறினார். இதில் சக்திவேல், ஆறுமுகம், அசோக், சைமன், முருகு, ராமமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் துரைராஜ் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**தினம் ஒரு தகவல் புதினாவில் இத்தனை குணங்களா?**




உணவே மருந்து, மருந்தே உணவு என்பது தமிழர்களின் பால பாடம். நமது முன்னோர் தங்களுக்கு வரும் பிணிகளை உணவில் மாற்றங்களை செய்வதன் மூலமே போக்கிக் கொண்டனர். இந்த வரிசையில் தமிழர்கள் உணவில் அடிக்கடி இடம் பெறும் ஒரு தாவரம் புதினா. மடிந்த விளிம்புகளுடன் கூடிய பச்சை பசேலென்ற இலைகளுடன் காணப்படும் புதினா அபாரமான மணமும், ருசியும் கொண்டது. புதினா ஒரு புதிரான தாவரமும் கூட.

புதினாவில் வயல் புதினா, கார்ன் புதினா, ஜப்பானிய புதினா, கோசி, பெப்பர் மின்ட் என்பன உள்பட 40 வகை புதினாக்கள் இருக்கின்றனவாம். இதில் ஏ.பி.சி வைட்டமின்கள், துத்தநாகம், தாமிரம், மாங்கனீசு, இரும்பு, பொட்டாசியம், சுண்ணாம்புச் சத்து, நார்ச் சத்து, புரதம் என்று பல சத்துக்கள் நிரம்பி காணப்படுகின்றன. இதில் உள்ள ஆண்டி ஆக்சிடன்ட் பொருட்கள் பெருங்குடல் புற்று நோயை தீர்க்கும் என்று மருத்துவ உலகம் கண்டறிந்துள்ளது.

ஐந்து ரூபாய்க்கு கைநிறைய கிடைக்கும் புதினாவின் மருத்துவ சக்தி அபாரமானது. புதினாவை உணவில் அனைத்து கீரைகள் மற்றும் காய்கறிகளுடனும் சேர்த்து பயன்படுத்தலாம். பத்து புதினா இலைகளை கழுவி பச்சையாக அப்படியே மென்று சாப்பிடலாம். அல்லது புதினா இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து அருந்தலாம். புதினா, வயிற்று வலி, அஜீரணம், வாயுத் தொல்லை, மலச் சிக்கல், உப்புசம், வயிற்றுப் போக்கு உள்பட பல வயிற்றுக் கோளாறுகளை தீர்த்து விடுகிறது. இதன் தண்டுகளையும், இலைகளையும் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து, அதில் தேன், எலுமிச்சை சாறு பிழிந்து இரவிலும், அதிகாலையிலும் குடித்து வந்தால் வயிற்றில் உள்ள கிருமிகள், புழுக்கள் நீங்குவதுடன், காய்ச்சல், நீர்க்கடுப்பு அகலும். செரிமானம் ஆவதில் பிரச்சினை இருந்தால் புதினா சாறுடன் எலுமிச்சை சாறு கலந்து குடித்தால் செரிமானக் கோளாறு நீங்கி விடும்.

ஒரு வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு சிறிதளவு புதினாச் சாறு அளித்து வந்தால் வயிற்றுக் கோளாறுகள் குணமாகி குழந்தைகள் வீரிட்டு அழுவது நிற்கும். புதினாவை அரைத்து முகத்தில் பூசி வந்தால் முகப்பரு, வீக்கம், தீப்புண், சொறி, சிரங்கு நீங்கும். புதினாவில் இருந்து தயாரிக்கப்படும் மென்தால் என்ற எண்ணெய் தலைவலிக்கு நல்லது. புதினாவில் இருந்து பற்பசையுடன், காதுவலி, வீக்கம், சைனஸ், மூட்டுவலி ஆகியவற்றுக்கான மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

புதினா இலைகளை ஒரு பாத்திரத்தில் போட்டு குறைந்த அளவு தீ வைத்து, நீர் சேர்க்காமல் வதக்கி எடுத்து உடலில் வலி, குடைச்சல் இருக்கும் பாகங்களில் ஒத்தடம் கொடுத்தால் வலி குறையும். மூட்டு வலிக்கு இந்த முறை சிறந்த பயனளிக்கும். புதினாவை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் ஊளைச் சதை குறைந்து ‘சிலிம்’ ஆகலாம். புதினா பற்றிய ஆராய்ச்சிகள் இன்றும் உலக அளவில் நடந்த வண்ணம் உள்ளன. இதன்மூலம் புதினாவை பற்றிய பல புதிர்களை அவிழ்க்க வாய்ப்பு உள்ளது.

**நடப்பு ஆண்டில், காபி உற்பத்தி சரிவடையும்**



புதுடெல்லி

நடப்பு ஆண்டில் காபி உற்பத்தி சரிவடையும் என மத்திய தொழில் மற்றும் வர்த்தக இணை அமைச்சர் இ.எம்.சுதர்சன நாச்சியப்பன் பாராளுமன்ற மாநிலங்களவையில் அண்மையில் தெரிவித்தார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் காபி உற்பத்தி நிலவரங்கள் நன்றாக இருந்தன என்றும், கனமழையால் பின்னர் காபி தோட்டங்கள் பாதிக்கப்பட்டன என்றும் தெரிவித்த அவர், பயிர் மலர்ந்த பிறகு காபி உற்பத்தி 3.47 லட்சம் டன்னாக இருக்கும் என்று குறிப்பிட்டார். காபி விளையும் பகுதிகளில் ஏப்ரல், மே மாதங்களில் கடும் வறட்சி நிலவியது. பிறகு, ஜூன் முதல் ஆகஸ்டு மாதம் வரை தொடர் மழை பெய்தது. கனமழை காரணமாக காபி பயிர்களை நோய் தாக்கியது. மேலும் கையிருப்பில் உள்ள காபியும் சேதமடைந்தது. தொடர் மழையால் வழக்கமாக பயிரை பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளும் கூட பாதிக்கப்பட்டன. இந்நிலையால் வறட்சியாலும், கனமழையாலும் காபி உற்பத்தி எந்த அளவிற்கு குறைந்துள்ளது என்பது பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாச்சியப்பன் கூறினார். உற்பத்தி சரிவடையும் நிலை உருவாகியுள்ளதால், காபி ஏற்றுமதியும் பாதிக்கப்படும் இடர் ஏற்பட்டுள்ளது. 2013–14 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி உற்பத்தி 57 லட்சம் மூட்டைகளாக இருக்கும் என காபி வாரியம் மதிப்பீடு செய்துள்ளது. ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபி கொட்டைகளை கொண்டதாகும்.

**சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க மத்திய அரசு ஒப்புதல்**

புதுடெல்லி

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு, சர்க்கரை ஆலைகளுக்கு வட்டியில்லாமல் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகைகளை சர்க்கரை ஆலைகள் எளிதாக வழங்க முடியும்.

**கடும் நிதி நெருக்கடி**

சர்க்கரை ஆலைகள் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக கடும் நிதி நெருக்கடியால் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்த கரும்பிற்கு ஏராளமான தொகையை பாக்கி வைத்துள்ளன. இந்நிலையில் சர்க்கரை துறையில் உள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க பிரதமர் மன்மோகன் சிங் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் அடங்கிய சிறப்புக் குழு ஒன்றை நியமித்தார். விவசாய துறை அமைச்சர் சரத் பவார் தலைமையில் அமைக்கப்பட்ட இக்குழுவில் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், விமான போக்குவரத்து துறை அமைச்சர் அஜித் சிங், பெட்ரோலிய அமைச்சர் வீரப்ப மொய்லி மற்றும் உணவு அமைச்சர் கே.வி. தாமஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழு அமைக்கப்பட்ட பிறகு சர்க்கரை துறைக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக ஏற்கனவே 40 லட்சம் டன் மூலச்சர்க்கரையை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கப்படும் என்றும், பெட்ரோலில் எத்தனால் கலக்கும் அளவு தற்போதைய 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. தற்போது சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.7,000 கோடி வரை வட்டியில்லா கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் கூறியுள்ளார்.

**கரும்பு நிலுவை தொகை**

இதற்கான வட்டியை மத்திய அரசும், சர்க்கரை மேம்பாட்டு நிதியமும் வழங்கும் என தெரிகிறது. எனினும் இந்த கடன் தொகையை கரும்பு கொள்முதலுக்காக விவசாயிகளுக்கு பாக்கி வைத்துள்ள நிலுவைத் தொகையை கொடுப்பதற்கு மட்டுமே கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும் என சரத் பவார் தலைமையிலான அமைச்சர்கள் குழு வலியுறுத்தியுள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கையை சர்க்கரை நிறுவனங்கள் வரவேற்றுள்ளன.

கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்

சேலம் மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்று கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

<u>குறைதீர்க்கும் நாள் கூட்டம்</u>

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நேற்று நடந்தது. இதில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசினர்.

விவசாயி சுந்தரம் பேசும்போது, நாட்டின் முதுகெலும்பே விவசாயம் தான். ஆனால் விவசாயமே கால்நடைகளை நம்பிதான் இருக்கிறது. இருப்பினும், எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்தாண்டு கோமாரி நோய் தாக்குதலுக்கு ஏராளமான மாடுகள் இறந்துவிட்டது. இதனால் மாடுகளை வைத்திருந்த விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

கால்நடைத்துறை டாக்டர்கள் அடங்கிய குழுவினர் கிராமத்திற்கு சென்று மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டாலும், ஒரு சில மாடுகள் விடுபட்டு விடுகின்றன. இதன் காரணமாக கோமாரி நோய் அதிகளவில் பரவுகிறது.

<u>இழப்பீடு தொகை</u>

இதனை கட்டுபடுத்த, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு இளைஞரை தேர்வு செய்து அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் பட்சத்தில், அந்த கிராமத்தில் உள்ள அனைத்து கால்கடைகளுக்கும் தடுப்பூசி போடமுடியும். இதனை நடைமுறைபடுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு உரிய இழப்பீடு தொகை வழங்க தமிழக அரசை, மாவட்ட நிர்வாகம் வலியுறுத்த வேண்டும், என்றார்.

<u>கலெக்டர் பதில்</u>

இதற்கு பதில் அளித்து கலெக்டர் மகரபூஷணம் பேசுகையில், கோமாரி நோய் தாக்குதலுக்கு மாடுகள் அடுத்தடுத்து இறந்துபோனதால் மாவட்டத்தில் மாடுகள் சந்தை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சேலம் மட்டுமின்றி ஈரோட்டில் இருந்து கால்நடை மருத்துவர்கள் கூடுதலாக வரவழைக்கப்பட்டு அனைத்து மாடுகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்த போலீஸ் அதிகாரிகள், கலெக்டர்கள் மாநாட்டில் கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

<u>தரமான தடுப்பூசி போட வேண்டும்</u>

கூட்டத்தில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பேசுகையில், கொண்டப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஓடை ஆக்கிரமிப்பு அகற்றக்கோரி குறைதீர்க்கும் கூட்டம் வழியாக தாசில்தாரிடம் மனு கொடுத்து 7 மாதம் ஆகியும்

இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு அதிகாரிகள் இவ்வாறு மெத்தனபோக்கில் நடந்து கொண்டால் விவசாயிகள் பிரச்சினை எப்படி தீரும்.

சேலம் மாவட்டத்தில் இந்தாண்டு போதிய மழை பெய்யாத காரணத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததோடு, வறட்சியால் விவசாயம் பாதிக் கப்பட்டுள்ளது. எனவே, மாவட் ட நிர்வாகம் சார்பில் காலி இடங்களில் அதிகளவில் மரக்கன்றுகளை நட முன்வரவேண்டும். கோ மாரி நோய் தாக்கி மாடுகள் அதிகளவில் இறந்துபோனதற்கு காலாவதியான மருந்து கொடுத்தது தான் காரணம் என்று புகார் எழுந்துள்ளது. எனவே, கால்நடைகளுக்கு சரியான காலகட்டங்களில் நல்ல தரமான கோ மாரி நோய் தடுப்பூசி போடப்பட வேண்டும், என்றனர்.

கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரி சிவசுப்ரமணியம் பேசும்போது, சேலம் மாவட்டத்தில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. காலாவதியான மருந்து கொடுத்ததால் மாடுகள் உயிரிழந்ததாக கூறப்படும் குற்றசாட்டு ஏற்புடையதாக இல்லை. தரமான மருந்துகள் மட்டுமே கால்நடைகளுக்கு கொடுக்கப்படுகிறது, என்றார்.

கூட்டத்தில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணிக்குமார் மற்றும் அனைத்துத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**சின்னவெங்காயம், முருங்கை விலை தொடர்ந்து அதிகரிப்பு தக்காளி கிலோ ரூ.16-க்கு விற்பனை**



ஊட்டி,

ஊட்டியில் காய்கறி விலை ராக்கெட் வேகத் தில் உயர்ந்து வருகிறது. இதில் சின்ன வெங்கா யம், முருங்கைக்காய் விலை தொடர்ந்து அதி கரித்து வருகிறது. தக் காளி ரூ.16-க்கு விற்பனை யாவதால் நடுத்தர மக்கள் சற்று நிம்மதி அடைந்து உள்ளனர்.

## ராக்கெட் வேகத்தில் காய்கறி விலை

தமிழகம் முழுவதும் காய்கறி விலை கணிசமாக உயர்ந்து உள்ளது. விவசாய பூமியான நீலகிரி மாவட்டத்தில் விவ சாய நிலங்கள் அழிக்கப்பட்டு வீட்டு மனைகளாக மாற்றம், வன விலங்குகள் அட்டகாசம் உள்ளிட்ட பல்வேறு காரணங் களால் விவசாயம் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகின் றது. இதனால் விவசாய நிலங் களையும், விவசாய தொழிலை யும் பாதுகாக்க உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

இதனிடையே உற்பத்தி குறைவு காரணமாக காய்கறிக ளின் விலை ராக்கெட் வேகத் தில் உயர்ந்து வருகின்றது. ஊட்டி உழவர் சந்தையில் கடந்த வாரம் பெரிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு ரூ.36-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது விலை குறைந்து ரூ.28-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## சின்ன வெங்காயம் கிலோ ரூ.50

ஆனால் சின்ன வெங்காயம் தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது. தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.50 வரை விற் பனை செய்யப்பட்டு வருகிறது. உள்ளூர் மாவட்டத்தில் விளை யக் கூடிய பீன்ஸ் பயிர்கள் அதிகமாக உற்பத்தியானதால் அதன் விலை சற்று குறை வடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

இதற்கு அடுத்த படியாக ஊட்டி அவரை ரூ.90, பச்சை பட்டாணி- ரூ.80, முருங்கைக் காய் ரூ.80, கேரட்-ரூ.38, கத்தரிக்காய்- ரூ.34 என இதர காய்கறிகள் விற்பனை செய் யப்பட்டு வருகின்றன. தக்காளி ரூ.16-க்கு விற்பனையாவதால் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த வர்கள் சற்று நிம்மதி அடைந்து உள்ளனர்.

<u>விலை குறைய வாய்ப்பு</u>

இது குறித்து காய்கறி வியா பாரிகள் தரப்பில் விசாரித்த போது, உற்பத்தி விளைச்சல் குறைவு என்பதால் தமிழகம் முழுவதும் காய்கறி விலை உயர்ந்து உள்ளன.

இன்னும் சில வாரங்கள் விலை உயர்வு காணப்படும். அதன்பிறகு விலை படிப்படியாக குறைய வாய்ப்பு உள்ளது என்றனர்.

**கரும்பு கொள்முதல் விலையை ரூ.3,500 ஆக அறிவிக்க வேண்டும்**
**உற்பத்தியாளர்கள் சங்க கூட்டத்தில் கோரிக்கை**



அரியலூர்,

கரும்பு கொள்முதல் விலையை ரூ.3 ஆயிரத்து 500 ஆக அறிவிக்க வேண்டும் என்று கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க கூட்டம்</u>

கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க கூட்டம் அரியலூர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.கூட்டத்திற்கு சங்கத்தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.செய லாளர் பன்னீர்,துணை செய லாளர்கள் வில்வநாதன், யோசுதாஸ், குமார், பொரு ளாளர் விஜயகுமார்,சட்ட ஆலோசகர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண் டார்கள்.

<u>தீர்மானங்கள்</u>

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கரும்பு சாகுபடி மிகவும் மோசமான நிலையில் உள்ள தால் கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளார்கள்.உற்பத்தி செலவு அதிகமாகிறது, விவசாய பணிக்கு ஆட்கள் கிடைப்பது கடினமாக உள்ளது.இதனை கருத்தில் கொண்டு கரும்பிற் கான கொள்முதல் விலையை அறிவிக்க முத்தரப்பு கூட்டம் கூட்டி விலையை முடிவு செய்ய தமிழக அரசை கேட்டுக்கொள்வது.

<u>மழை குறைவு</u>

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெட்டிய கரும்பு கடுமையான வறட்சி காரண மாக வளர்ச்சி குறைந்தும், நோய்கள் தாக்கியும் மிகவும் மோசமாக உள்ளது.அதன் வயது 13மாதம் ஆகிறது.இதற்கு ஆலை திறக்காமல் காலம் தாழ்த்தினால் கரும்பின் எடை குறைந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார் கள்.அரியலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மழை அளவு குறை வாக பெய்துள்ளதால் மார்ச் ஏப்ரல் மாத நடவு கரும்புகள் மிகவும் பாதிக்கப்படும் ஆகவே உடனடியாக கோத்தாரி சர்க்கரை ஆலை அறவை பணியை தொடங்க வேண்டும்.

<u>டன் ஒன்றுக்கு ரூ.3500</u>

விவசாயிகளின் நிலை மையை கருத்தில் கொண்டு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3ஆயிரத்து 500 வயல் விலையாக அறிவிக்க தமிழக அரசை கேட்டுக்கொள்வது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

**கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

சேலம் மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்று கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

<u>குறைதீர்க்கும் நாள் கூட்டம்</u>

சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நேற்று நடந்தது. இதில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசினர்.

விவசாயி சுந்தரம் பேசும்போது, நாட்டின் முதுகெலும்பே விவசாயம் தான். ஆனால் விவசாயமே கால்நடைகளை நம்பிதான் இருக்கிறது. இருப்பினும், எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்தாண்டு கோமாரி நோய் தாக்குதலுக்கு ஏராளமான மாடுகள் இறந்துவிட்டது. இதனால் மாடுகளை வைத்திருந்த விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

கால்நடைத்துறை டாக்டர்கள் அடங்கிய குழுவினர் கிராமத்திற்கு சென்று மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டாலும், ஒரு சில மாடுகள் விடுபட்டு விடுகின்றன. இதன் காரணமாக கோமாரி நோய் அதிகளவில் பரவுகிறது.

<u>இழப்பீடு தொகை</u>

இதனை கட்டுபடுத்த, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு இளைஞரை தேர்வு செய்து அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் பட்சத்தில், அந்த கிராமத்தில் உள்ள அனைத்து கால்கடைகளுக்கும் தடுப்பூசி போடமுடியும். இதனை நடைமுறைபடுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த மாடுகளுக்கு உரிய இழப்பீடு தொகை வழங்க தமிழக அரசை, மாவட்ட நிர்வாகம் வலியுறுத்த வேண்டும், என்றார்.

## கலெக்டர் பதில்

இதற்கு பதில் அளித்து கலெக்டர் மகரபூஷணம் பேசுகையில், கோமாரி நோய் தாக்குதலுக்கு மாடுகள் அடுத்தடுத்து இறந்துபோனதால் மாவட்டத்தில் மாடுகள் சந்தை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சேலம் மட்டுமின்றி ஈரோட்டில் இருந்து கால்நடை மருத்துவர்கள் கூடுதலாக வரவழைக்கப்பட்டு அனைத்து மாடுகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்த போலீஸ் அதிகாரிகள், கலெக்டர்கள் மாநாட்டில் கோமாரி நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## தரமான தடுப்பூசி போட வேண்டும்

கூட்டத்தில் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் பேசுகையில், கொண்டப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஓடை ஆக்கிரமிப்பு அகற்றக்கோரி குறைதீர்க்கும் கூட்டம் வழியாக தாசில்தாரிடம் மனு கொடுத்து 7 மாதம் ஆகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு அதிகாரிகள் இவ்வாறு மெத்தனபோக்கில் நடந்து கொண்டால் விவசாயிகள் பிரச்சினை எப்படி தீரும்.

சேலம் மாவட்டத்தில் இந்தாண்டு போதிய மழை பெய்யாத காரணத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததோடு, வறட்சியால் விவசாயம் பாதிக் கப்பட்டுள்ளது. எனவே, மாவட் ட நிர்வாகம் சார்பில் காலி இடங்களில் அதிகளவில் மரக்கன்றுகளை நட முன்வரவேண்டும். கோ மாரி நோய் தாக்கி மாடுகள் அதிகளவில் இறந்துபோனதற்கு காலாவதியான மருந்து கொடுத்தது தான் காரணம் என்று புகார் எழுந்துள்ளது. எனவே, கால்நடைகளுக்கு சரியான காலகட்டங்களில் நல்ல தரமான கோ மாரி நோய் தடுப்பூசி போடப்பட வேண்டும், என்றனர்.

கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரி சிவசுப்ரமணியம் பேசும்போது, சேலம் மாவட்டத்தில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. காலாவதியான மருந்து கொடுத்ததால் மாடுகள் உயிரிழந்ததாக கூறப்படும் குற்றசாட்டு ஏற்புடையதாக இல்லை. தரமான மருந்துகள் மட்டுமே கால்நடைகளுக்கு கொடுக்கப்படுகிறது, என்றார்.

கூட்டத்தில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணிக்குமார் மற்றும் அனைத்துத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.